பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 29 வியாழக்கிழமை 15.10.2020 கதிர் 340

**இனி இது ரகசியம் அல்ல!**

ஆட்சிகள் மாறினால் காட்சிகள் மாறுவது தவிர்க்க முடியாதது தான்.

காட்சி மாறியமையால்தான், முன்னர் கொடிகட்டிப் பறந்த ரிஷாத் பதியுதீன் போன்றவர்கள் ஒளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பக்கம்02

# மார்ச் மாதம் வரை அரசுக்குக் காலக்கெடு; மீறினால் சர்வதேச சட்டங்கள்தான் பாயும்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எச்சரிக்கை



கொழும்பு,ஒக். 15

இலங்கையில் ஆட்சியிலிருக்கும் ராஜபக்ஷ அரசு, தமிழ் – முஸ்லிம் சமூகம் மீதான அடக்குமுறைகளையும், பழிவாங்கல் நடவடிக்கைகளையும் உடன் நிறுத்த வேண்டும். சர்வ தேசம் போற்றும் வகையில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அரசு திருந்தி நடக்க வேண்டும். அந்தக் கால அவகாசத்துக்குள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன் ஸிலின் தீர்மானத்தையும் அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

இல்லையேல் சர்வதேச சட்டங்கள் தான் அரசு மீது பாயும்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பக்கம் 02

# ராஜபக்ஷக்களின் அராஜகத்துக்கும் ஓரணியில் நின்று முடிவு கட்டுங்கள்!



## மத பீடங்களின் அறிக்கைகளை வரவேற்று ஜே.வி.பி. கருத்து

கொழும்பு, ஒக்ரோபர் 15

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ – பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் சர்வாதிகாரத்துக்கு எதிராக அமரபுர பீடம், ராமன்ய பீடம் ஆகிய பௌத்த பீடங்களும், கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் கிளர்ந்தெழுந்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். அனைத்து மத பீடங்களும், மதம் சார்ந்த அமைப்புகளும் எம்முடன் ஓரணியில் நின்று இந்த அரசின் அராஜக ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டும்.

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். பக்கம் 02

## கட்டுமீறும் 'கொரோனா' 22 மாவட்டங்கள் இலக்கு

### பேராபத்துக் காத்திருக்கின்றது என எச்சரிக்கின்றார் இராணுவத் தளபதி

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணிப் பரவல் நாட்டில் 22 மாவட்டங்களைப் பாதிப்படையச் செய்துள்ளது. அந்த மாவட்டங்களைச் சேர்ந்த 1700 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, சகல இடங்களிலும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

–இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினனட் ஜெனரல் பக்கம் 02

## கட்டுநாயக்காவிலும் இன்று முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்

கொழும்பு,ஒக்.15

கட்டுநாயக்க பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்ட பகுதிகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று (15) காலை 5.00 மணி முதல் மறு அறிவித்தல் வரை கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கம்பஹா மாவட்டத்தின் 19 பொலிஸ் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களுக்கு இதுவரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலையத்தின் கைத்தொழிற்சாலைகளில் அலுவல்களை முன்னெடுக்க பக்கம் 02

## கட்டுநாயக்கா தொற்று 110 ஆக அதிகரிப்பு

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 43 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி நேற்று மாலை 5 மணியுடன் நிறைவடைந்த காலப் பகுதியில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உறுதிப் பக்கம் 02

## மூன்றாம் அலைப் பாதிப்பு 1,723 நேற்றும் 132 பேருக்குத் தொற்று

கொழும்பு, ஒக். 15

இலங்கையில் நேற்றும் 132 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கொரோனாவின் மூன்றாவது அலையான மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணியில் சிக்கி தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டவர்களும், ஆடைத் தொழிற்சாலை பக்கம் 02

## ரிஷாத்தைத் தேடி தொடரும் வேட்டை; வெளிநாடு செல்லவும் தடையுத்தரவு!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச் பக்கம் 02

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு புதிய அரச அதிபர் நியமனம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அதிபராகக் கே.கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அமைச்சர் அவை அலுவலகத்தில் அதற்கான நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய பக்கம் 02

## யாழ்.பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களுக்குக் கடும் தண்டனை

### துணைவேந்தருக்கு மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை

(விவரமான செய்தி 3 ஆம் திகதி)

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிச்சயமாக ரிஷாத் கைதுக்கு முந்திய பிணை கேட்டு நீதிமன்றத்தில் இன்று வழக்குத் தொடுக்கப்படும். வழக்கு முடிவு வரும் வரை ரிஷாத்தின் தலைமறைவு நீடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ரிஷாத் என்பதால், நிச்சயமாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை உதவிக்கு அழைப்பார்கள் என்று தோன்றியது. உங்களை சட்ட உதவிக்கு அழைத்தார்களா என்று சுமந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டேன்.

*"கட்சிக்காரர்களின் (Clients) இணக்கமில்லாமல், அவர்கள் தொடர்பான இரகசியங்கள் பற்றிய விடயத்துக்கு நான் பதில் தரக் கூடாது, பதில் தர முடியாது"* – என்றார் சுமந்திரன்.

அவர் தெளிவான பதில் தராவிட்டாலும் அந்தப் பதிலிலேயே என் கேள்விக்கு விடை இருப்பதாக நான் உணர்ந்து கொண்டேன்.

வேறொரு விடயத்தையும் அவர் சொன்னார்.

புதிய அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர் கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பல தொல்பொருள் திணைக்களத்தினால் பலவந்தமாகப் பிடுங்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலை வேதனையுடன் கூறினார் அவர்.

தனியான சட்டக் கட்டமைப்பை உருவாக்கி, விசேட கவனம் எடுத்து, பல நூறு வழக்குகள் தொடர்ந்து, ஒவ்வொன்றாகத் தொல்பொருள் திணைக்களத்துடன் மோதி, சட்ட ரீதியாக அவற்றை விடுவிக்க வேண்டிய அவசரமும் அவசியம் ஏற்பட்டிருப்ப தாக அவர் சொன்னார்.

பல இடங்களில் தாம் விளைவித்த வயல்களில் அறுவடைக்குச் செல்ல முடியாத இக்கட்டில் பல தமிழ் விவசாயிகள் சிக்குண்டுள்ளனர் என்றார் வேதனையுடன் அவர்.

*"நாளை (இன்று வியாழன்) கல்முனையில் ஒரு நிலம் தொடர்பாக கல்முனை நீதிமன்றில் வழக்கு. அதன் பின்னர் திரியாய், தென்னைமரவாடி, கொக்குத்தொடுவாய் பகுதிகளில் தமிழர்களை அவர்கள் விதைத்த வயல்களுக்குள் செல்ல வேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களம் தடுத்தமை தொடர்பில் நேரில் விவசாயிகளுடன் போய் ஆராய வேண்டியுள்ளது. அதன் பின்னர் வெடுக்குநாறிமலை கோவில் விடயம் தொடர்பான தரப்புகளுடன் போச வேண்டியிருக்கின்றது. அதன் பின்னர்தான் கொழும்பு வழக்கு விடயங்கள்"* – என்றார் சுமந்திரன்.

அவரது கூற்றிலிருந்து இரண்டு விடயங்களைப் புரிந்து கொண்டேன்.

ஒன்று – கடந்த அரசில் புதிய அரசமைப்பு உருவாக்கம், வழிகாட்டல் குழு, கம்பரெலிய என்று அலைந்த சுமந்திரனுக்கு இனிமேல் – இந்த அரசில் – தொல்பொருள் திணைக்களம், வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், கடற்தொழில் அமைச்சு போன்றவற்றுடன் நீதிமன்றத்தில் மல்லுக்கட்டும் வேலைதான் முக்கியமாக இருக்கப் போகின்றது.

இரண்டு – தமிழர் தரப்பு வழக்குகளில் சிரத்தை காட்டிய பின்னர் நேரமும் வசதியும் இருந்தால்தான் தென்னிலங்கை அரசியல் விவகார வழக்குளை அவர் கையாள்வார்.

ரிஷாத் பதியுதீனைக் கைது செய்வதற்கான முழு முயற்சியை அரசு ஆரம்பித்த பின்னர் – ரிஷாத் தலைமறைவாகியுள்ள சூழலில் – அவருக்கு முன்பிணை பெறும் முயற்சிகளை ரிஷாத் தரப்பு தீவிரமாக ஆரம்பித்துள்ள சூழலில் கூட, அதற்காகக் கொழும்புக்கு விரையாமல் கிழக்குத் தமிழர்களின் காணி விவகாரம் தொடர்பாகக் கிழக்குக்குள் நின்று மினக்கெட்டு வேலை செய்ய அவர் தீர்மானித்திருக்கின்றமை தமது புதிய பொறுப்பை அவர் உணர்ந்திருக்கின்றார் என்பதைக் காட்டுகின்றது.

இருபதாவது திருத்தம் தொடர்பில் நேற்று மாலை களுவாஞ்சிக்குடியில் அவர் நடத்திய கருத்தரங்கு வெற்றிகரமாக ஒப்பேறியதாகத் தகவல்.

காணிப் பிரச்சினையில் சிக்குண்டிருக்கும் கிழக்கு மக்களுக்காக அவர் அதிகம் உழைப்பது இன்றைய வரலாற்றுக் கட்டாயம். அது அவருக்குப் புரிந்திருப்பது நல்லதே...!

– மின்னல் –

## மூன்றாம் அலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுடன் தொடர்புகளைப் பேணியவருமே நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் கணப்பட்டுள்ளனர்.

இதனால் மினுவாங்கொடை கொரோனா கொத்தணிப் பரவலில் சிக்கிய மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 1,723 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 170 ஆக அதிகரித்துள்ளது. அதில் 3 ஆயிரத்து 357 பேர் குணமடைந்துள்ளனர். 1,800 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

## மார்ச் மாதம் வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நாடு மூவின மக்களுக்கும் சொந்தமான நாடு. ஓர் இனத்துக்கும் மட்டும் இந்த நாடு சொந்தமல்ல.

இங்கு மூன்று இனத்துக்குமான அரசியல் உரிமை, மொழி உரிமை மற்றும் மத உரிமை ஆகியன பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆட்சியிலுள்ள அரசு சர்வதேசத்தை அவமதித்துச் செயற்பட முடியாது. அதன் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும். நாட்டின் நலன் கருதிய சர்வதேசத்தின் தீர்மானங்களை அரசு நிறைவேற்ற வேண்டும். தமிழ் – முஸ்லிம் சமூகம் மீதான அடக்குமுறைகளையும், பழிவாங்கல் நடவடிக்கைகளையும் உடன் அரசு நிறுத்த வேண்டும். சர்வதேசம் போற்றும் வகையில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அரசு திருந்தி நடக்க வேண்டும்.

ஏனெனில், இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் சர்வதேச நாடுகள் வழங்கியுள்ள கால அவகாசம் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நிறைவடைகின்றது. அந்தக் கால அவகாசத்துக்குள் ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் பாரிய விளைவுகளை இந்த அரசு சந்திக்கும்.

சர்வதேச தீர்மானங்களை நிராகரித்தால் சர்வதேச சட்டங்கள்தான் அரசு மீது பாயும். இதைக் கவனத்தில்கொண்டு ராஜபக்ஷ அரசு செயற்பட வேண்டும் – என்றார்.

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியும் என அவர் குறிப்பிட்டார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் தமது அலுவலக அடையாள அட்டையினை ஊரடங்கு உத்தரவு காலப் பகுதியில் ஊரடங்கு அனுமதிப் பத்திரமாக பயன்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்டுமீறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மினுவாங்கொடை கொத்தணிப் கொரோனா பரவலை நாம் உடன் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் பேராபத்தைச் சந்திக்க வேண்டி வரும்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று அங்கு பணியாற்றுபவர்கள் மூலம் பல்வேறு தரப்பினருக்கும் பரவலடைந்து வருகின்றது.

தனது கணவனுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை அறிந்தும் பணிக்குச் சென்ற பெண்ணால் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பெண் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றியமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அங்கு பணியாற்றும் பலருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான பெண்ணின் கணவன் மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றுகின்றார் – என்றார்.

# கொழும்பில் வாழ்பவர்கள் விழிப்பாகவே இருங்கள்

கொழும்பு, ஒக். 15

கம்பஹா மாவட்டத்தைபோல் கொழும்பு மாவட்டத்துக்கும் கட்டுப்பாடுகளை விதிக்க இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் வைத்திய ஜயருவன் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

கொவிட் – 19 வைரஸ் என்பது மனிதனில் இருந்து மனிதனுக்கு பரவக்கூடியது. எனவே, ஆள் நடமாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில் அது வேகமாக பரவக்கூடும். எனவேதான் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கடந்த காலங்களில் கோரியிருந்தோம்.

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு நகரிலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் குறுகிய பிரதேசத்துக்குள் அதிகளவானவர்கள் வாழ்கின்றனர், வீடுகளிலும் அதிகளவானவர்கள் இருக்கின்றனர். எனவே, வைரஸ் தாக்கம் ஏற்பட்டால் அது வேகமாக பரவக்கூடும். ஆகவே மக்கள் தனது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றவேண்டும். சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

33 ஆவது கொத்தணிபரவல்மூலம் (மினுவாங்கொட) கொழும்பு மாவட்டத்தில் 160 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில்போல் கொழும்பில் கட்டுப்பாடுகளை விதிக்கும் தீர்மானம் தற்போதைக்கு மேற்கொள்ளப்படவில்லை. எது எப்படியிருந்தாலும் மக்கள் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அதேவேளை, கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான வசதிகள் உள்ளன, நோயாளிகளுக்கான கட்டில்களும் போதுமானளவு இருக்கின்றன. – என்றும் அவர் கூறினார்.

# சந்திரகுமாரின் 'சமுதாயக் கட்சிக்கு' தேர்தல் ஆணையகம் அங்கீகாரம்

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையிலான 'சமுதாயக் கட்சி' புதிய அரசியல் கட்சியாக சுயாதீன தேர்தல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அறிய வந்தது.

அதனுடன் சேர்ந்து மேலும் பல கட்சிகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதாகத் தெரியவந்தது.

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 110 ஆக அதிகரித்துள்ளது என அப்பகுதியின் தலைமை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள பெண்கள் கொழும்பில் உள்ள நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்கும், ஆண்கள் இரணவில வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

## மட்டகளப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி கலாமதி பத்மராஜா பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு உடனடியாக அமுலாகும் வரையில் இணைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான புதிய மாவட்ச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள கே.கருணாகரன் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியவர் என்பதும், இவர் இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இது தொடர்பான மேலதிக செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## ரிஷாத்தைத் தேடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுக்காகவே ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு தலைமை நீதிவான் பிரியந்த லியனகே இந்தத் தடை யுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்யக் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் உட்பட பல பொலிஸ் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டில் நேற்று கிருலப்பனையில் கைதுசெய்யப் பட்ட ரிசாத் பதியுதீனின் கணக்காளரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கிடையில் ரிஷாத் பதியுதீனின் பாதுகாப்பு விவகாரங்களுடன் இணைக்கப்பட்ட ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் நேற்று முன்தினம் வெள்ளவத்தைப் பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள அதிரடித் தீர்ப்பும் இந்த அரசின் சர்வாதிகாரத்துக்கு முடிவுகட்ட சிறந்த உதாரணமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், 20ஆவது திருத்தச் சட்ட வரைவில் ராஜபக்ஷ அரசு திருத்தங்களை மேற்கொண்டு அதை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட்டால் எதிரணிகளுடன் சேர்ந்து நாமும் எதிர்ப்போம் எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிரான போராட்டத்தில் எதிரணியினர் மற்றும் நாட்டு மக்கள் ஆகியோருடன் பௌத்த பீடங்களும் கைகோர்த்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

20ஆவது திருத்தத்துக்கு எதிராக பௌத்த பீடங்களும், கத்தோலிக்க ஆயர் பேரவை உள்ளிட்ட ஏனைய மதம் சார்ந்த அமைப்புகளும் ஊடகவியாளர் மாநாடுகளை நடத்தியும், அறிக்கைகளை வெளியிட்டு விட்டும் மட்டும் இருக்கக்கூடாது. செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

சர்வாதிகாரத்துக்கு வழி செய்யும் அரசமைப்பின் 20ஆவது திருத்த முயற்சிகளைத் தோற்கடிக்குமாறு பௌத்தத்தின் நான்கு பிரதான மத பீடங்களில் இரண்டான அமரபுர பீடமும், ராமன்ய பீடமும் கொழும்பில் பகிரங்க செய்தியாளர் மாநாடு கூட்டி, அறிக்கை வெளியிட்டு அரசியல் தலைவர்களையும் பொதுமக்களையும் கோரியிருக்கின்றன. அதேவேளை, 20ஆவது திருத்தச் சட்ட வரைவைக் கைவிடுமாறு கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கையூடாக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதனிடையே 20ஆவது திருத்த வரைவில் உள்ள சகல பரிந்துரைகளையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேற்ற உயர்நீதிமன்றம் முட்டுக்கட்டை போட்டுள்ளது. இது தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இம்சை வதையில் ஈடுபட்ட மாணவர்களுக்குக் கடும் தண்டனை அறிவிப்பு!

(ந.லோகதயாளன்),
(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் மீது இம்சை வதை புரிந்த சிரேஷ்ட மாணவர்களின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குமாறு பல்கலைக் கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரைத்துள்ளது.

புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தில் இம்சை வதையில் ஈடுபடுபவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக விரைவு பொறிமுறை அறிமுகப்படுத்தப் பட்டிருந்த நிலையில், குற்றம் இடம்பெற்று ஒரு மாத காலத்தினுள் தண்டனை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைப் பிரகாரம், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் 4 பேருக்குக்கு ஒரு கல்வி ஆண்டு காலம் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் வேண்டும் என்று பல்கலைக் கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் குற்றத்தின் பாரதூரத் தன்மை கருதி மாணவி ஒருவருக்குக் கடும் எச்சரிக்கையுடனான விலக்களிப்புக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் இரண்டாவது கூட்டம் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, கடந்த மாதம் 03 ஆம் திகதி சித்த மருத்துவத்துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பிலான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சித்த மருத்துவத் துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பில் ஆரம்பகட்ட பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதனடிப்படையிலான குற்றப்பத்திரிகை மீதான முறைசார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அறிக்கை நேற்று மாலை மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைக்கமைய தண்டனைக்குரியவர்களுக்கான அறிவித்தல்கள் இன்று துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில், பல்கலைக்கழகத்தின் சகல பீடாதிபதிகளான பத்துப் பேரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் முன்மொழியப்பட்ட இரண்டு பேரவை உறுப்பினர்களும், மாணவ ஆலோசகர் ஒருவரும், பிரதிச் சட்ட நிறைவேற்று அதிகாரி (புறொக்டர்) ஒருவரும், போதனைசார் விடுதிக் காப்பாளர்கள் இருவருமாக இருபது பேர் அங்கம் வகிக்கின்றமையுடப், பதிவாளரின் நியமனப் பிரதிநிதியாக மாணவர் நலச் சேவைகளுக்கான உதவிப்பதிவாளர் செயலாளராகவும் செயற்படுகின்றனர்.

நேற்றைய கூட்டத்தில், சித்த மருத்துவத் துறை மாணவர்களுக்கான தண்டனைகள் பரிந்துரைக்கப்பட்டமையுடன், இனிவரும் காலத்தில் இதே பொறிமுறையில் இம்சை வதையில் ஈடுபட்டு, குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து கற்றல் நடவடிக்கைகளுக்கான தடை, சிறப்புத் துறைகளைகளுக்கான தடை, முதலாம், இரண்டாம் வகுப்புச் சித்திகளுக்கான தகைமையிழப்பு, மகாபொல மற்றும் நிதியுதவிகளைத் தடை செய்தல், பல்கலைக் கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் உட்பட கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குற்றத்தின் தன்மையைப் பொறுத்து பல்கலைக் கழக மாணவர் பதிவு இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## யாழில் ஐந்நூறு குடும்பங்கள் தனிமைப்படுத்தலில் உள்ளன!

### மாவட்ட செயலர் தகவல்

யாழ்ப்பாணத்தில் இதுவரை 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய கொரோனா நிலைவரம் தொடர்பாக நேற்று (புதன்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலைவரம் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும்கூட அபாயமான சூழல் விலகவில்லை. எனவே. அனைவரும் கவனமாகச் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் இதுவரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், கட்டாய தனிமைப்படுத்தலில் இருந்தவர்களின் எண்ணிக்கை 28 இல் இருந்து தற்போது 18 ஆகக் குறைவடைந்துள்ளது. பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தொற்று இனங்காணப்படாதவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒருவருக்கு மாத்திரமே யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், யாழ். மாவட்டத்தினுடைய பாதுகாப்பை உறுதிபடுத்துவதை முன்னிட்டு எடுக்கப்படுகின்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன், அனைவரும் சுகாதார வழிகாட்டல்களைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் நீண்டதூர போக்குவரத்தில் ஈடுபடுவோர் தங்களைப் பற்றிய விவரங்களை சுகாதாரப் பிரிவினருக்கு கட்டாயமாகத் தெரியப்படுத்த வேண்டும்.

தேவைப்படின், அவர்களுக்குரிய பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள சுகாதாரப்பிரிவினர் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே, அனைவரும் சமூகப்பொறுப்புடன் செயற்பட வேண்டும்.
– என்று தெரிவித்துள்ளார்.

## மணல் கொள்ளையர்களை தடுத்தவர் தாக்கப்பட்டார்!

### வரணிப் பகுதியில் சம்பவம்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்.ஒக்.15

யாழ்ப்பாணம் வரணிப் பகுதியில் திருட்டு மணல் ஏற்றி வந்தவர்களுக்கு வழியை விட மறுத்தவர் மீது மணல் கொள்ளையர்கள் தாக்குதல் மேற்கொண்டமையினால் பாதிக்கப்பட்டவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின்போது வரணியை சேர்ந்த கே.கலாசுதன் (வயது 46) என்பவரே மண்வெட்டிப் பிடியால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வரணிப் பகுதியில் அகலம் குறைந்த பாதை ஒன்றின் ஊடாக திருட்டு மணல் ஏற்றியவாறு ஐந்து உழவு இயந்திரங்கள் ஒன்றின் பின் ஒன்றாக அணிவகுத்து பயணித்துள்ளன. அதன்போது அப்பாதையால் இரவு வீடு நோக்கிப் பயணித்தவர் அதனை அவதானித்து கேள்வி கேட்டுள்ளார். இதனால் பாதைவிடுமாறு திருட்டு மணல் ஏற்றியவர்கள் தர்க்கம் செய்துள்ளனர். இதன்போது திருட்டு மண் ஏற்ற அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்தமையால் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்ற வைத்திருந்த மண் வெட்டியின் பிடியைக் கழற்றி வந்து தாக்கியுள்ளனர்.

இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர் தொலைபேசி மூலம் உறவுகளிற்கு தகவல் வழங்கி அவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் பொலிஸாரிடமும் முறையிட்டார். இந்த முறைப்பாட்டின் பெயரில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். தாக்குதல் மேற்கொண்ட மணல் கொள்ளையர்கள் தப்பியோடிய நிலையில் ஒரெயொரு உழவு இயந்திரத்தை மட்டும் பொலிஸார் மீட்டுச் சென்றுள்ளனர்.

## கொழும்பில் புதுப்பிக்கப்பட்டுள்ள வீதி சமிக்ஞைகள் இயங்குகின்றன!

கொழும்பிலுள்ள வீதிகளில் நேற்று (புதன்கிழமை) முதல் புதுப்பிக்கப்பட்ட வீதி சமிக்ஞைகள் இயங்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் பின்னர், வீதி சமிக்ஞைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன என அவர் கூறியுள்ளார்.

பாணந்துறை – வில்லியம் சந்தி வரையிலான பாணந்துறை மொரட்டுவ, கட்டுபெத்த மற்றும் அங்குலான சந்தி என்பவற்றிலும் பொருப்பன சந்தி பெலெக்கடே சந்தி, மெலிபன் சந்தி, டெம்ப்லஸ் வீதி, தெஹிவளை மேம்பாலம், வில்லியம் சந்தி ஆகியவற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வீதி சமிக்ஞைகள் திருத்தப்பட்டு இயங்குகின்றன.

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல் சம்பவம் யாழ். ஊடக மன்றம் ஜனாதிபதிக்குக் கடிதம்

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு நீதி கோரி யாழ். ஊடக மன்றம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க.மகேசன் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

கடந்த 12ஆம் திகதி மரக்கடத்தல் இடம்பெறுவதை செய்தி மூலம் வெளிக்கொணர்வதற்கு அந்த இடத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்ற கணபதிப்பிள்ளை குமணன் மற்றும் சண்முகம் தவசீலன் ஆகிய இரு ஊடகவியலாளர்கள் கடத்தல்காரர்களால் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இந்நிலையில் இந்தச் சம்பவத்துக்கு பக்கச்சார்பற்ற நீதியை நீதித்துறையும் ஊடக அமைச்சு மற்றும் ஊடகத்துறையைப் பாதுகாக்கின்ற அமைப்புகளும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். மேலும், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள மகஜரை அனுப்பி இதுதொடர்பாக துரித நடவடிக்கை எடுப்பதற்கு தான் முயற்சிகளை மேற்கொள்வார் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி அவசர சிகிச்சைப் பிரிவில்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

87 வயதான அவர், திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நியூ டயமன்ட் கப்பல் தலைவருக்கு பன்னிரண்டு கோடி ரூபா அபராதம்!

தீப்பரவலுக்கு உள்ளான நியூ டயமண்ட் கப்பலின் தலைவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 12 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.

அவர் நேற்று (புதன்கிழமை) நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கடலில் எரிந்துக்கொண்டிருந்த கப்பலைப் பாதுகாப்பாக மீட்பதற்கு இலங்கைக் கடற்படையினரும் கடற்பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கான செலவீனங்களை கப்பலின் உரிமையாளர் ஈடு செய்ய வேண்டும் என்று இலங்கை அரசின் சார்பில் கோரப்பட்டிருந்தது.

இதன்படி, 34 கோடி ரூபாவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சட்டமா அதிபர் அந்தக் கப்பல் நிறுவனத்துக்கு கோரிக்கை கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார்.

இதற்கமைய அந்தத் தொகையைச் செலுத்துவதற்குக் கப்பலின் உரிமையாளர் இணங்கியுள்ளார் என்று அந்த நிறுவனத்தால் இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்கொண்டு 12 கோடி ரூபா செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது என்ன நீதியோ?

**‘உலக்கை போகும் இடம் பார்ப்பார், ஊசி போகும் இடம் பாரார்’ என்ற ஒரு முதுமொழி உண்டு.**

**ரிஷாத் பதியுதீன் எம்.பி. விடயத்தில் பழிவாங்கல் போக்கில் நடவடிக்கை எடுக்கும் ராஜபக்ஷக்களின் அரசு, அதற்குக் கூறும் காரணத்தை நோக்கும் போது இந்தப் பழமொழிதான் அதற்குப் பொருத்தமானது போலத் தோற்றுகின்றது.**

**அதைத்தான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சுட்டிக்காட்டுகின்றார்.**

***“மஹிந்த ராஜபக்ஷ அரசு 2015 ஆம் வருடத் தேர்தலில் தங்கள் தேர்தல் கூட்டங்களுக்காகப் பயன்படுத்திய அரச வளங்களுக்கான கட்டணங்களை மீளச் செலுத்தி விட்டதா? தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு மக்களை அழைத்துச் செல்லப் பயன்படுத்திய இ.போ.ச. பஸ் கட்டணங்கள், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவற்றுக்கான தேர்தல் பிரசார விளம்பரக் கட்டணங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்த விமானப்படை நிறுவனத்தின் ஹெலிக்கொப்டர்களின் வாடகை எனப் பல கோடி ரூபா நிலுவையில் உள்ளன. இவர்களை எல்லாம் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும்படி சட்டமா அதிபரால் உத்தரவிட முடியதா?”*** **என்று மிக நியாயமான கேள்வி ஒன்றைக் கிளப்பியிருக்கின்றார் மனோ கணேசன்.**

**அவரின் கேள்வியில் உண்மைகள், அர்த்தங்கள் நிறையப் பொதிந்து கிடக்கின்றன.**

**தன்னுடைய பிரசாரக் கூட்டங்களுக்கு மக்களை அரச பஸ்களில் ஏற்றி இறக்கிய செலவீனங்களுக்கான கட்டணங்களைச் செலுத்தாத ஆளும் தரப்பு, இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கான பஸ்களை ஒழுங்கு செய்து கொடுத்தமைக்காக ரிஷாத் பதியுதீன் மீது பழிவாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வது அபத்தத்திலும் அபத்தம். அதுவும் இடம்பெயர்ந்தோர் நலன்களைக் காக்க வேண்டிய பொறுப்பில் அமைச்சராக இருந்த ரிஷாத்தை, தனது அமைச்சர் கடமையின் ஒரு பொறுப்பாக ஆற்ற வேண்டிய அந்த விடயத்தைச் செய்தமைக்காக கைது செய்வது என்பது மிக மோசமான செயலாகும்.**

**புத்தளம் மாவட்டத்தில் வாழும் மன்னார் மாவட்ட மக்களை, அவர்கள் தம் வாக்குரிமைகளைப் பயன்படுத்துவதற்காக மன்னாரில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளுக்குக் கூட்டிச் சென்றமைக்கான இ.போ.ச. பஸ்களுக்கான கட்டணம் 90 லட்சம் ரூபாவும் உரிய அமைப்புகளால் செலுத்தப்பட்டு விட்டன.**

**இதன் பின்னரும் இதே காரணத்துக்காக ரிஷாத் பதியுதீனைக் கைது செய்ய வேண்டும் என்று அரசு துடியாய்த் துடிப்பது சட்டத்தையும், நீதியையும் கையில் எடுத்து விளையாடும் அரசியல் சித்து விளையாட்டன்றி வேறில்லை.**

**இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது அரசின் பொறுப்பு. தேர்தல் ஆணையமே கவனிக்க வேண்டிய வேலை. இடம்பெயர்ந்தோருக்குப் பொறுப்பான அமைச்சர் அந்தப் பணியை முன்னெடுத்தமையை எந்த அடிப்படையில் சட்டமா அதிபர் கைதுக்குரிய குற்றமாகக் கருதுகின்றார் என்பது தெரியவில்லை; புரியவில்லை.**

**‘ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை’ வழக்கில் மஹிந்த ராஜபக்ஷவையும் ஏனையோரையும் விடுவித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நாட்டின் சட்டமா அதிபர் மறந்திருக்க மாட்டார் என்று நினைக்கிறோம்.**

**சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள என்ற பெயரில் உதவி வழங்கும் பல தரப்புக்களிடம் இருந்து இலங்கை அரசுக்குக் கிடைத்த பல கோடி ரூபா பணம், அப்போது சந்திரிகா அரசில் முக்கிய அமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட ‘ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை’ என்ற அரசுக்கு சொந்தமில்லாத ஒரு நிறுவகத்தின் கணக்கில் வைப்பிடப்பட்டது. சில தரப்புகளால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டமையை அடுத்து, ஓரிரு வருடங்களின் பின்னர் அந்த நிதியை மஹிந்த ராஜபக்ஷ அப்படியே அரசுக்குத் திருப்பிச் செலுத்தி விட்டமையால் அவர் குற்றமிழைக்கவில்லை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.**

**இப்போது, இடம்பெயர்ந்த மக்களுக்காக வாக்களிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட இ.போ.ச. பஸ்களுக்கான கட்டணங்கள் அதற்குரிய அமைப்பு மூலம் பின்னர் செலுத்தப்பட்டு விட்டது.**

**இதற்காக ரித் பதியுதீன் ஏன் கைது செய்யப்பட்ட வேண்டும்? ‘ஹெல்பிங் ஹாம்பாந்தோட்டை’ விவகாரத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பொருந்திய நீதி, இங்கு ரிஷாத்துக்குப் பொருந்தி வராதா? சட்டமா அதிபருக்குத்தான் வெளிச்சம்.**

## 21 மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர் நாட்டை முடக்கும் நிலை உருவாகவில்லை

### சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

நாட்டின் 21 மாவட்டங்களில் கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய மக்கள் செயற்படுவார்களாயின் நாட்டில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பதிவாகியுள்ள நோயாளர்களைத் தவிர, கொழும்பு மாவட்டத்தில 160 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 140 பேரும் கொரோஜனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

ஏனைய மாவட்டங்களைப் பொறுத்த வரையில் சில மாவட்டங்களில் ஒருவர் மாத்திரம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

4 மாவட்டங்களில் இவ்வாறு ஒருவர் மாத்திரம் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், 4 மாவட்டங்களில் இருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள், பிரென்டிக்ஸ் நிறுவனத்துடன் தொடர்புடையவர்கள் என கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நாட்டை முடக்கும் நிலை உருவாகவில்லை என சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## ஹற்றனில் மண்சரிவு இருவர் படுகாயம்!



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் நகரில் எம்.ஆர்.டவுன் ளிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எதிர்ப்பக்கத்தில் ஏற்பட்ட மண்சரிவில் இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) அதிகாலை நான்கு மணியளவில் ஏற்பட்டுள்ளமையுடன் அங்கிருந்த இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடைகளுக்குப் பின்புறமாக இருந்த பாரிய மண்திட்டே இவ்வாறு சரிந்துள்ளது.

மேலும், இந்த மண்திட்டு தொடர்ந்து சரியக்கூடிய அபாயம் காணப்படுகின்றமையால் அப்பகுதியில் உள்ள ஒரு குடும்பத்தினர் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை கரோலினா பகுதியில் கித்துல் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்து இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நான்கு மணியளிவில் இடம்பெற்றுள்ளமையுடன், விபத்தில் ஒரு வீடு முற்றாகவும், மற்றைய வீடு பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெறும் போது ஒரு வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர் எனவும் எனினும் தெய்வதீன மாக எவருக்கும் காயமேற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவுகின்றமையால் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## கொழும்பில் 2884 பேருக்கு பி.சி.ஆர். சோதனை 10 பேருக்குக் கொரோனா தொற்று அடையாளம்

கொழும்பு, ஒக்.15

கடந்த 6 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பில் இரண்டாயிரத்து 884 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்தியர் ருவன் விஜேமுனி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்களுள் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவர்களில் ஐந்து பேர் மாத்திரமே கொழும்பு நகரை சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள் இதொடர்பாக அச்சப்படாமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கடற்றொழிலில் ஈடுபடவேண்டாம் மீனவர்களுக்கு அறிவுறுத்தல்!

கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இன்று (வியாழக்கிழமை) காலை வரை இவ்வாறு கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், கடல் கொந்தளிப்பாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிராந்தியங்களில் மணித்தியாலததுக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் என அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமையில்!

*கஹபொல - சிலுமின பிரிவெனாவில் உள்ள 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*குறித்த பிரிவெனாவில் உள்ள பிக்கு ஒருவரை பார்வையிட வந்து சென்ற பிக்குவின் தாய், கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.*

*இதன்காரணமாகவே குறித்த பிரிவெனாவின் பிக்குகள் உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பிலியந்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

# பேலியகொட மீன்சந்தையின் இடையூறுகளைத் தீர்க்குக!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவு



பேலியகொட மீன் சந்தையின் நுழைவாயிலை மாற்றுவது தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ ஆகியோர் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) கள விஜயத்தை மேற்கொண்டு ஆராய்ந்த நிலையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் மத்திய மீன் சந்தையான பேலியகொட மீன் சந்தைக்கு தினந்தோறும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் சில மணித்தியாலங்களுக்குள் வந்து செல்கின்ற நிலையில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி சந்தையின் செயற்பாடுகளுக்கு பாரிய இடையூறாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் மீன் சந்தையின் நுழைவாயில் அமைந்துள்ள பகுதியிலேயே புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற மரக்கறிச் சந்தையான மெனிக் சந்தையின் நுழைவாயிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், குறித்த நுழைவாயில் அமைந்துள்ள பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கு பாரிய இடையூறை ஏற்படுத்தும் என்று மீன் சந்தை நிர்வாகிகளால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், கொழும்பு – நீர்கொழும்பு வீதியை கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையுடன் இணைக்கும் பிரதான வீதிக்கு மீன் சந்தையின் நுழைவாயிலை மாற்றித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனிமைப்படுத்தல் நிறைவுசெய்து 579 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து நேற்று (புதன்கிழமை) 379 பேர் வெளியேறியுள்ளனர்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய 52 ஆயிரத்து 90 பேர் இதுவரை தமது தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளனர்.

அத்துடன், தற்போது, 84 நிலையங்களில் 9 ஆயிரத்து 905 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பு தேசிய வைத்தியசாலை தாதிக்கும் கொரோனா தொற்று!

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியொருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமை பி.சி.ஆர். பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் தாதிக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும், அவர் எவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகினார் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

## கொரோனா தொற்றாளர் அடையாளம் கொழும்பில் மூடப்பட்டது வீதி ஒன்று!

கொழும்பு-பொரளை லெஸ்லி ரணகல மாவத்தை தற்காலிகமாக பொலிஸாரால் மூடப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் நான்கு பேர் அடையாளம்காணப்பட்டஷ்மையை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டபோது அவர்களுக்குத் தொற்று ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னதாக பொரளையில் அமைந்துள்ள இரு உணவகங்கள் உட்பட ஆறு கடைகள் தற்காலிகமாக மூடப்பட்டன.

பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கடந்த சில நாள்களாக பொரளையில் அமைந்துள்ள ஆறு கடைகளுக்கு சென்றமையையடுத்து, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய ஆறு கடைகளும் மூடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.வைத்தியசாலைகளில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு!

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் யாழ். குடாநாட்டு வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளில் இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்தியர் வைத்தியர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுகாதாரச் சிக்கல்கள் காரணமாக ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட நடமாடும் இரத்ததான முகாம்கள் பிற்போடப்பட்டமையே இரத்தத் தட்டுப்பாட்டுக்கான காரணம்.

இதனைக் கருத்திற் கொண்டு



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளுக்கு குருதிக் கொடையாளர்கள் நேரடியாக வருகை தந்து இரத்ததானம் வழங்க முடியும்.

அந்தவகையில் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை தற்போது நடைமுறையிலுள்ள கொரோனா கால சுகாதார நடைமுறைகளுக்கமைய குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் வழங்க முடியும்.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு இரத்ததான முகாம்களின் ஒழுங்கமைப்பாளர்கள் குருதிக் கொடையாளர்களை ஊக்குவிக்க முன்வர வேண்டும். மேலதிக விவரங்களிற்கு 0772988917 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்புகொள்ள முடியும். – என்றார்.

# கம்பஹாவில் ஊடரங்கு தளர்வா? இன்று இறுதி முடிவு எடுக்கப்படும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

கம்பஹா மாவட்டத்தின் 18 பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது குறித்து இன்று (வியாழக்கிழமை) தீர்மானிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுகின்றது.

அந்தப் பிரதேசங்களில் கடைகளையும் மருந்தகங்களையும் திறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்கள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணித்ததன் பின்னர் இன்று ஹோட்டல்கள் மற்றும் மருந்தகங்களைத் திறப்பது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்.

இன்று ஊரடங்குச் சட்டம் உள்ள பிரதேசங்களுக்குப் பயணிப்பதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் எவரையும் வாகனங்களில் ஏற்றவோ வாகனத்தில் இருந்து இறக்கவோ கூடாது. எனினும் அந்தப் பிரதேசங்களில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், கைத்தொழிற்சாலைகள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களினதும் தனிப்பட்ட ஆவணங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

ஊழியர்களின் முழுமையான பெயர், அடையாள அட்டை இலக்கம், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, அவரைத் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி போன்ற விடயங்கள் அந்த கோப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

மினுவாங்கொட கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் தகவல்களை ஆராயும்போது இந்த தனிப்பட்ட விவரங்கள் புதுப்பிக்கப்படாமையே பெரும் சிக்கலாக அமைந்திருந்தது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டிக்கோயாவில் சரிந்து வீழ்ந்தது மரம் 3 வீடுகள் சேதம் மாணவி படுகாயம்!



ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா பட்டல்கெலே தொழிற்சாலைப் பிரிவில் பாரிய மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், கல்வியியல் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவியொருவர் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இரவு 9.55 மணியளவில் இடம்பெற்றது.

இந்தப் பிரதேசத்தில் வீசிய கடும் காற்று காரணமாக வீடுகளுக்கு கீழ் பகுதியில் இருந்த மிகவும் பழைமை வாய்ந்த பாரிய மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

இந்த மரம் வீழ்ந்ததில் சுவர் இடிந்து கட்டிலில் வீழ்ந்ததில் கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த கல்வியியல் கல்லூரி மாணவி காயமடைந்தார் எனவும் அதனை தொடர்ந்து அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர் எனவும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த மரம் வீழ்ந்ததன் காரணமாக வீட்டின் உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன், மூன்று வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மத்திய மலை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக இரவு வேளைகளில் பலத்த காற்று வீசுவதுடன் அடிக்கடி பலத்த மழையும் பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்து மின் தடை ஏற்பட்டுள்ளதுடன், போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அட்டன் – கொழும்பு, ஹட்டன் –நுவரெலியா, ஹட்டன் – டயகம, பொகவந்தலாவ, உள்ளிட்ட பல வீதிகளில் மண்திட்டுகள் சரிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர் இடம் பெற்ற காலத்திற்கு முன்பும், போர் இடம்பெற்ற காலத்திலும் மிகவும் அதிகமாக காணப்பட்ட பல தொழில்கள் இன்று காலங் கடந்தவையாகிவிட்டன. அவற்றின் பல தொழில் உபகரணங்கள் இன்று வெறும் காட்சிப் பொருள்களாக மட்டும் காட்சியளிக்க, வேறு சிலவோ முழுமையாகவே அழிவடைந்து செல்கின்றன.

இவற்றில் மேலும் சில தொழில் வகைகள் இலங்கையில் இருந்தே முற்றாக அழிவடையும் நிலைமையும் காணப்படுகின்றது.

சினிமா பாடல்கள் உட்பட பிரபலமான பாடல்களை முணுமுணுக்காத, வாய்களும் இல்லை கேட்காத செவிகளும் இல்லை எனலாம். இந்த பாடல்களில், 80 முதல் 90 வரையான ஆண்டுகளில் வந்த சினிமாப் படங்களின் இடைக்காலப் பாடல்கள் முக்கியமானவை. அந்தப் பாடல்களிற்காவே மக்கள் திரண்டு படம் பார்த்த வரலாறும் உண்டு.



ந.லோகதயாளன்

> 1980 முதல் 1985 வரையான காலத்தில் கூட படம் ஓடுவதற்கு ரீ.வி., டெக் வாடகைக்கு அமர்த்தினால் அவற்றை ஒரு காரில் மூடிக் கட்டி மணமகளை அழைத்து வருவது போன்றே கொண்டு வருவார் அதன் உரிமையாளர்.

# காணாமல் போகும் நம் தொழில்கள்

அந்த பாடல்களைப் பின்னாளில் ஒலி வடிவில் கேட்பதற்கு அவற்றை ரெக்கோடிங் செய்து பெற்றுக்கொள்ள குடாநாட்டில் பல ரெக்கோடிங் (ஒலிப் பதிவு கடைகள்) இயங்கின.

இவற்றில் புகழ் பெற்ற கடைகளாக நியூ விக்ரஸ், சுப்பபோ, சண், சதீஸ், பிள்ளையார் உட்பட யாழில் 30ற்கும் மேற்பட்டவையும் வடக்கில் பிற இடங்களில் 15ற்கும் அதிகமானவையும் காணப்பட்டன. இவற்றினை நேரடியாக நம்பி 200ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்தன.

ஆனால், இன்று கசற் ரெக்கோடர் பாவனையிலான ' டு இன் வன்' வானொலிப் பெட்டியே தேவையற்ற ஒன்றாகி அந்த தொழிலே முற்றாக கைவிடப்பட்டு விட்டது.

இதே காலத்தில் பெரும் வசதி படைத்த ஒரு சிலரது வீடுகளில் மட்டுமே தொலைக் காட்சிப் பெட்டி சொந்தமாக இருக்க ஏனையோர் வாடகைக்கு தொலைக்காட்சிப் பெட்டி எடுத்து கூட்டமாகச் சேர்ந்து படம் பார்க்கும் நிலை இருந்தது.



அச்சமயம் அதற்கான வீடியோ கொப்பிகள், அதன் பின்பு சீ.டி.என்பன வாடகைக்கே பெற வேண்டும்.

1980 முதல் 1985 வரையான காலத்தில் கூட படம் ஓடுவதற்கு ரீ.வி., டெக் வாடகைக்கு அமர்த்தினால் அவற்றை ஒரு காரில் மூடிக் கட்டி மணமகளை அழைத்து வருவது போன்றே கொண்டு வருவார் அதன் உரிமையாளர்.



இதன்போது அதற்கான வீடியோ நாடாவை (கசெற்றை) வாடகைக்கு வழங்கும் தொழிலில் குடாநாட்டில் மட்டும் 200ற்கும் மேற்பட்ட கடைகள் காணப்பட்டன. இவற்றில் 500ற்கும் மேற்பட்டோர் பணியாற்றினர். இங்கே வீடியோ கொப்பியை பெறுவதானால் தேசிய அடையாள அட்டைகளைப் பிணை வைத்தே பெற்றுக்கொள்ள முடிந்தது.

இவற்றின் பின்பு குடாநாட்டின் பல பகுதிகளிலும் வன்னியின் சில பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான மினித்தியட்டர்கள் முளைத்தன. இவை அனைத்தும் இன்று மெல்ல மெல்ல குறைவடைந்து இன்று ஒரு வீட்டிற்கு இரண்டு அல்லது மூன்று தொலைக் காட்சிப் பெட்டிகள். சமையல் அறையில் இருக்கும் சட்டி, பானைகள் போன்று தொலைக் காட்சிப் பெட்டியும் வீட்டில் பல அளவுகளில், பல தினுசுகளில் இன்று இருக்கின்றன.

மாட்டு வண்டில் ஆரம்பத்தில் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டாலும் 1950 முதல் 1970 வரையில் பொருள்கள் ஏற்றி இறக்கும் வாகனமாக மாட்டு வண்டில்களே அதிகம் பயன்படுத்தப்பட்டன. இவை 1980ஐயும் தாண்டி 1990 வரையில் ஓரளவு காணப்பட்டு இன்று விரல் விட்டு எண்ணும் அளவே கானப்படுகின்றன. ஆனால் 1990 வரையில் பல ஆயிரம் வண்டில்கள் காணப்பட்டன.

நெசவுத் தொழில் குடிசை கைத் தொழிலாகவும் சிறு மற்றும் பெரும் கைத் தொழிலாகவும் காணப்பட்டு பின்னர் மின் தறி நிலையங்களாகவும் இயங்கிய நிலையில் ஆயிரக் கணக்கானோரின் தொழில் மையமாகவும் விளங்கியது. போர்க் காலத்திலும், இறக்குமதி தடைகளின் காலத்திலும், பெரிதும் கைகொடுத்த அந்தத் தொழில் அழிவடைந்து செல்வதோடு இருக்கும் சில தொழிற்சாலைகளும் போதிய பணியாளர்கள் இன்மையால் இழுத்து மூடும் அவலமே காணப்படுகின்றது.

1990ஆம் ஆண்டு போர் ஆரம்பித்த காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில. மட்டும் 30 தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால. இன்று 9 தொழிற்சாலைகள் இயங்கினாலும் அவற்றில் பலவற்றில் அதிக இயந்திரங்கள் பயன்பாடு இன்றி மூடிக் கட்டியபடியே உள்ளன. சில தொழிற்சாலை இயந்திரங்கள் இரும்பு விலைக்கும் விற்பனை செய்யப்பட்டு விட்டது.

இதேபோன்று குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முறைமையோடு ஒட்டிநின்ற உரல் மூலம் மா இடித்தல், திருகையின் மூலம் மா அரைத்தல், அம்மி, ஆட்டுக்கல் என்பனவற்றின் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட விற்பனையும் சூடு பிடித்திருந்தது. இன்று அம்மி கலியாண வீட்டிற்கும் , உரல் செத்த வீட்டிற்கும் மட்டும் தேடும் பொருளாக மாறும் அவலம் ஏற்பட்டு விட்டது. கிறைண்டர் இவற்றின் இடத்தைப் பிடித்துள்ளது.

இவை அனைத்திற்கும் அப்பால் இலங்கையிலே புகையிலை உற்பத்திற்கு பெயர்போனது குடாநாடு. அதிலும் குறிப்பாக தாவடி, இணுவில் இதன் பூர்வீகமாக இருந்த நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள், சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்கள் சுருட்டு மற்றும் புகையிலை உற்பத்தியை நம்பியே வாழ்வியலை கொண்டு நடாத்தினர். இந்தக் காலத்திலே - 1991 ஆம் ஆண்டு - சுருட்டுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான தலைமைப் பணிமனைக்கு ஓர் அலுவலகம் கொள்வனவு செய்யப்பட்டது.

கடதாசிகளில் பை உற்பத்தி மற்றொரு தொழில். இதனை நம்பியே 1997ஆம் ஆண்டுவரையில் பல நூறு குடும்பங்கள் வாழ்ந்தன. சிமெந்து மற்றும் லக்ஸ்பிறே பால் மா வரும் வெற்றுப்பைகளை எடுத்து வெட்டி ஒட்டி விற்பனை செய்த காலம். இதன் தேவையும் 1983 ஆம் ஆண்டில் இருந்து 1997 ஆம் ஆண்டு வரையில் அதிகமாகவே இருந்தத்து. அதாவது அதிக இடப்பெயர்வின் காரணமாக நிவாரண விநியோகம் இடம்பெற்ற காலம். அதனால் இந்த வகை பைகளுக்கு அதிக கோரலும் தேவையும் இருந்தன. தற்போது 'சொப்பிங் பாக்' வந்து கடதாசிப் பையின் சந்தையைப் பிடித்து விட்டது.

முதியவர்கள் மற்றும் மாற்று வலுவுள்ளவர்களின் பெரும் தொழிலாக அன்று விளங்கிய மற்றுமோர் தொழில் வாய்ப்பாக துவிச்சக்கர வண்டி திருத்தகங்கள் இருந்தன. இன்றைய வளர்ச்சி உலகில் இயந்திர வாழ்க்கைக்கு நாம் மாறியமையால் துவிச்சக்கர வண்டிகளின் பாவனை குறைவடைய மோட்டார் சைக்கிள் பாவனை அதிகரித்தமையினால் முழுத்திற்கு ஒரு துவிச்சக்கர வண்டித் திருத்தகம் என்ற நிலைமை மாறி ஊருக்கு ஒரு கடையே தேடி அலையும் நிலமையே காணப்படுகின்றது. *







# கொரோனா சுகாதார சமூக பாதுகாப்பு நிதிய மீதி 165 கோடியே 90 லட்சமாக அதிகரிப்பு!

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 165 கோடியே 90 லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

பிரதமர் அலுவலகம் 82,906.97 ரூபாவையும், சிறுமி ஆர்.ஜீ.ஐ. சிதுமினி பண்டார 6000 ரூபாவையும், கம்பஹா மாவட்ட சமுர்த்தி அதிகாரிகளின் நலன்புரி சங்கம் 100,000 ரூபாவையும், இலங்கை வங்கியின் ஓய்வூதிய சங்கம் 2,500,000 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

மேற்படி அன்பளிப்புகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் வதியும் செட் மற்றும் ஜெட் சகோதரர்கள் 207,851.16 ரூபாவை நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர். அவர்களது தந்தை இந்த அன்பளிப்பு தொகையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

சங்கைக்குரிய எம்பிலிபிடியே தேஜோசார தேரர் 5,000 ரூபாவையும், இலங்கை தேசிய நிர்மாணத்துறை



சங்கம் 4,500,000 ரூபாவையும், ஹெட்டிகொட இன்டஸ்ட்ரீஸ் தனியார் நிறுவனம் 5,000,000 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

லங்கா லேய்லன்ட் பிறைவேட் நிறுவனம் 5000,000 ரூபாவையும், ஊழடழஅடிழஇன்ரர் நேசனல் கொன் ரெய்னர் ரேர்மினல்ஸ் நிறுவனம் 800,000 ரூபாவையும், தாஜ் பென்ரோறா றிசோர்ட் அன்ட் ஸ்பா 525,892.65 ரூபாவையும், வரையறுக்கப்பட்ட ஓன் வீவ் டிவலப் மென்ட் தனியார் நிறுவனத்தின் ஊழியர் நலன் பேணல் சங்கம் 202,600 ரூபாவையும் லங்கா கிறீன் குளோவ் பிறைவேற் லிமிடெட் 500,000 ரூபாவையும் கன்சல்ரன் இன்ஜினியோர்ஸ் அன்ட் ஆட்கிடெக் அசோசியேசன் பிறைவேட் லிமிடெட் 2,504,707.10 ரூபாவையும், நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகார சபை 1,000,000 ரூபாவையும், மூதூர் பிரதேச செயலாளர் அலுவலகம் 39,584.52 ரூபாவையும், திரு. சால்ஸ் பெரேரா 150,000 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

தற்போது இடுகம கொவிட் 19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி 1,659,015,132.02 ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இந்தக் கணக்குக்கு பங்களிப்பு செய்து வருகின்றனர்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் www.itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும்.

# மாணவர்களுக்கான புலமைப்பரிசில் காசோலை பிரதமரிடம் கையளிப்பு!



இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் பொருட்டு ரூபாய் 90 மில்லியன் (ரூ.89,895,000) பெறுமதியான காசோலை நேற்று (செவ்வாய்க்கிழமை) அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைவர் சிறியான் டி சில்வா விஜயரத்னவால் இந்தக் காசோலை பிரதமரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 5 ஆயிரத்து 993 பிள்ளைகளுக்காக முதல் கட்டமாக புலமைப்பரிசில் வழங்குவதற்காக இந்நிதி மக்கள் வங்கிக்கு வழங்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொழில் அமைச்சராக செயற்பட்ட 1994ஆம் ஆண்டு இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேசத்தின் பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலும், ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களுக்கு செய்யும் உபகாரமாகவும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கேற்ப 1994ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுவரும் வேலைத்திட்டத்துக்கு அமைய ஆண்டுதோறும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகள் 9 ஆயிரம் பேருக்கு, தலா 15 ஆயிரம் ரூபா வீதம் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத்திட்டமானது மக்கள் வங்கியினூடாக செயற்படுத்தப்படுவதுடன், மக்கள் வங்கியால் புலமைப்பரில் பெறும் பிள்ளைகளுக்காக குறித்த நிதி சிசு உதான சேமிப்பு கணக்கில் வைப்பிலிடப்படும்.

புலமைப்பரிசில் பெறும் அனைத்து பிள்ளைகளுக்கும் கணக்கு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மக்கள் வங்கியால் மலலசேகர சிங்கள, ஆங்கில அகராதியொன்று பரிசளிக்கப்படுவதுடன், சிசு உதான கணக்கிற்கு வழங்கப்படும் சாதாரண வட்டி விகிதத்தை விட அதிக சதவீதம் இந்தக் கணக்குகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைவர் சிறியான் டி சில்வா விஜயரத்ன மற்றும் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ உள்ளிட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் மக்கள் வங்கியின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பிரித்தானியாவில் இருந்து வந்த கழிவுகளை திருப்பி அனுப்புக!

## நீதிமன்று அதிரடி உத்தரவு

பிரித்தானியாவில் இருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய 242 கொள்கலன்களை மீள அனுப்புமாறு, மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொள்கலன்களை மீண்டும் ஏற்றுமதி செய்யக் கோரி மாற்றுக் கொள்கைக்கான மையம் தாக்கல் செய்த வழக்கு நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவுகளை மேல்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி ஏ.எச்.எம்.டி நவாஸ் மற்றும் நீதிபதி சோபிதா ராஜகருணா ஆகியேபர் பிறப்பித்தனர்.

கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் பிரித்தானியாவில் இருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியிலும் வைக்கப்பட்டன. அவற்றில் 21 கொள்கலன்கள் இதுவரை பிரித்தானியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

இதனையடுத்து, பிரித்தானியாவில் இருந்து 263 கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்கு இலங்கை அரசாங்கம் 1.69 பில்லியன் ரூபா இழப்பீடு கோரியது.

பாசல் சாசனத்தின் கீழ் இலங்கை வழக்கு தாக்கல் செய்துள்ளது என சுற்றுச்சூழல் அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த விடயம் தொடர்பாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கை மீறிய 135 பேர் கைது!

கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 135 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் நேற்று (புதன்கிழமை) காலை ஆறு மணிவரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# உயர்தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் ஈடுபட்ட நபர் ஒருவர் கைதாகினார்!

ஆள்மாறாட்டம் செய்து உயர்தரப் பரீட்சையில் தோற்றிய ஒருவர் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேனையூர் மத்திய கல்லூரியில் வெளிவாரியாக பரீட்சை எழுத வருகை தந்த ஒருவரே நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

வெருகல் - மாவடிச்சேனை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# அதிக விலைக்குப் பொருள்கள் விற்பனை உடன் மாவட்ட செயலகத்தில் முறையிடவும்!

## அரச அதிபர் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவிற்கு அறிவிக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அதற்கமைய யாழ். மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவின் 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமக்கள் முறைப்பாட்டை பதிவு செய்ய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நெருக்கடியான நிலைமைகள் காணப்படுகின்றன.

எனினும் இன்றுவரை எவ்வித அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

அதுமட்டுமன்றி நாட்டு மக்களின் நன்மை கருதி அரசாங்கம் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் சிலவற்றின் விலைகளை குறைத்துள்ளது.

எனவே அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் பொருள்கள் விற்பனை செய்கின்றமை கண்டறியப்பட்டால், அந்த வியாபாரிகள் மீது உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களால் முறைப்பாடு வழங்கப்பட்டால் உடனடியாக இந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நாம் நடவடிக்கைகளை எடுப்போம். - என்றும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர் மீதான வன்முறைகள் ஜனாதிபதிக்கு சிறிதரன் எம்.பி. கடிதம்!

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு, முறிப்புப் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பாக செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நீதி விசாரணையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இது தொடர்பாக சிறிதரன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

முல்லைத்தீவு, முறிப்புப் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பாக செய்தி சேகரிக்கச்சென்ற சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இரு ஊடகவியலாளர்கள் மீது கடந்த 2020.10.12ஆம் திகதி, திங்கட்கிழமை



தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், மரக் கடத்தல்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் இந்த நாட்டின் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும், ஊடக சுதந்திரத்தையும் கேள்விக்கு உட்படுத்துகின்ற செயலாகும்.

கடந்த காலங்களில் சிவராம், நிமலராஜன் உட்பட்ட 35 இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவங்களும், பிரதீக் எக்னெலிகொட போன்ற ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ள சம்பவங்களும் இந்த மண்ணில் அரங்கேறியுள்ளன.

இந்நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் கூட ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளும் வன்முறைகளும் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வருகின்றமை, மீளவும் அவ்வாறானதொரு சூழலை ஏற்படுத்தி விடுமோ என்ற ஐயத்தையும், தமக்கும் உயிராபத்துக்கள் ஏற்படக்கூடுமோ என்ற அச்சத்தையும் ஊடகவியலாளர்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

எனவே, தாங்கள் இந்த நாட்டின் முதல் மனிதன் என்ற வகையில் ஊடக சுதந்திரத்தையும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டு இனிவரும் காலங்களிலேனும் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கடிதம் வெகுசன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிற்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

## கொழும்பில் கொரோனாவை தடுக்க 6 குழுக்கள் நியமனம்

கொழும்பில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க 6 குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேயமுனி தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் 6 சுகாதார அதிகாரிகளின் கீழ் 49 பொது சுகாதார சேவை பணியாளர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புகளைக் கண்டறிந்து தொற்று மேலும் பரவாமல் தடுப்பது, கொழும்பு மற்றும் கொழும்பு நகருக்கு வெளியே தொற்றாமல் கொழும்பில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க 6 குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேயமுனி தெரிவித்துள்ளார்.

அதிக ஆபத்து மிக்கவர்களை தெரிவு செய்து அவர்கள் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனைகள் முதலில் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய கடந்த மார்ச் மாதம் முதல் கொழும்பில் மட்டும் 8 ஆயிரத்து 833 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படுவதை தடுப்பது போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக இவர்கள் கவனம் செலுத்தவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொரளையில் பி.சி.ஆர். முடிவுகள் வெளியாகின!

### எவருக்கும் தொற்று இல்லை

பொரளையில் மூடப்பட்ட கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர் உள்ளிட்டோருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அந்த முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் யாரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை என கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மினுவங்கொடை தொற்றுக்கு பின்னர் கடந்த 8 நாள்களில் கொழும்பில் 2 ஆயிரத்து 584 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகளை விஸ்தரிப்பதன் மூலம் எமது பிரதான இலக்காக இருப்பது சமூகத்தில் தொற்று பரவியுள்ளதா என்பதை இனங்காண்பதாகும்.

எனினும் நேற்று புதன்கிழமை வரை கொழும்பில் 11 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலை தொற்றுடன் தொடர்புடையவர்களாவர்.

புறக்கோட்டை ரயில் நிலையத்தில் 215 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் எதிர்வரும் நாள்களில் கிடைக்கப்பெறும். இதுவரையில் கொழும்பில் சமூக தொற்று ஏற்படவில்லை. ஏற்படுவதற்கான அச்சுறுத்தலும் இல்லை.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பொரளையில் சில கடைகள் மூடப்பட்டன. அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் யாரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்ற முடிவுகள் கிடைத்துள்ளன. – என அவர் மேலும் தெரிவித்தார்.

## மதுகமவில் மூவருக்கு கொரோனாத் தொற்று

மதுகம பிரதேசத்தில் கொவிட் தொற்றாளர்கள் மூவர் இனங்காணப்பட்டுள்ளனர் என மதுகம குடும்ப சுகாதார வைத்திய அதிகாரி அலுவலத்தின் நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மதுகம – கொழும்பு அதிவேக வீதியில் சேவையில் உள்ள சொகுசு பஸ் ஒன்றின் சாரதி, அதன் நடத்துனர் மற்றும் பஸ்ஸின் உரிமையாளர் ஆகியோரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

பஸ்ஸின் உரிமையாளர் மதுகம நவுன்துடுவ பிரதேசத்தில் வசித்து வரும் நிலையில், நடத்துனர் மதுகம பந்துகம பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸின் சாரதி மதுகம, ஒவிடிகல பிரதேசத்தை சேர்ந்தவர் என சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

குறித்த மூவரும் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் கடந்த தினத்தில் சுய விருப்பத்தின் பேரில் பீ.சி.ஆர் பரிசோதனை செய்துக் கொண்டமையைத் தொடர்ந்து நேற்று முன்தினமிரவு அவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## பொதுப் போக்குவரத்துப் பயணம் செய்வோருக்கு அவசர அறிவிப்பு!

### விடுத்தார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



பொது போக்குவரத்தை பயன்படுத்தும்போது மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பொது போக்குவரத்துக்;காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இலக்கங்களை குறித்துக்கொள்ளுமாறு பயணிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்மூலம் குறித்த வாகன சாரதிகளுக்கும் தொற்று தொடர்பாக எச்சரிக்கை விடுக்க முடியும் என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து ஆடைத் தொழிற்சாலை உள்ளடங்கலான அனைத்து நிறுவனங்களிலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

குறைந்தது வாரத்திற்கு ஒரு தடவையேனும் தொழிற்சாலை ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெருமளவான ஊழியர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல்வேறு தொழிற்சாலை ஊழியர்கள் ஓரிடத்தில் தங்கியிருப்பார்களாயின் அது தொடர்பாக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கு தொற்று பரவுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலை நகரில் நேற்று மாலை ஹெரோயினுடன் ஒருவர் கைது

திருகோணமலை துறைமுகப்பொலிஸ் பிரிவிற்கு உற்பட்ட கிறீன் வீதியில் ஹெரோயினுடன் 31 வயதுடைய ஒருவரை நேற்று மாலை தாங்கள் கைது செய்துள்ளனர் என துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து எண்பது மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டவர் வர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

துறைமுகப்பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து துறைமுகப் பொலிஸாருக்கு பொறுப்பாக உள்ள பிரதேசம் எங்கும் தேடுதல் வேட்டை மேற்கொண்ட பொலிஸார் கிறீன் வீதியில் உள்ள சந்தேக நபரின் தாயின் வீட்டிற்கு முன் தரித்து நின்ற ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை சோதனை மேற்கொண்டதில் வாகனத்தில் இருக்கையின் அடிப்பாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஹெராயின் மீட்கப்பட்டது. இருசக்கரவாகனம் மூலம் விற்பனைக்கு ஹெரோயின் எடுத்து வந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேக நபரைக் கைது செய்ததாக துறைமுகப்பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாட்டில் 'கொவிட் - 19' அரசுக்குள் 'கொவிட் - 20'

## மனோ எம்.பி. சாட்டையடி



நாட்டைப் பிடித்திருக்கும் நோய் கொவிட் - 19. ஆனால், அரசமைப்பின் 20 திருத்தத்தை வைத்துக் கொண்டு தள்ளாடும் அரசைப் பிடித்திருக்கும் நோய் கொவிட் - 20.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினருமானமனோகணேசன்தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் உள்ளே இப்போது 20 ஆவது திருத்தம் தொடர்பில் பெரும் கலகம் நடைபெறுகின்றது. எதிரணியில் நாம் இதை எதிர்ப்பதைப் போன்று அரசுக்குள் இருந்து பலர் எதிர்க்குரல் எழுப்பத் தொடங்கி விட்டார்கள்.

அமைச்சர்கள் விதுர விக்கிரமநாயக்க, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ ஆகியோர் அதிருப்தி அடைந்துள்ளார்கள். ஜனாதிபதிக்கு நெருக்கமான எம்.பியான கேவிந்து குமாரதுங்க எதிர்க்கின்றார். விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி. இப்போது இரண்டாவது முறை 20ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு 'காதல்' கடிதம் எழுதியுள்ளார். இதற்குப் பதில் இல்லை. அது ஒருதலைபட்ச காதல் போலிருக்கின்றது. அரசுக்கு ஆதரவு அளித்த பல தேரர்கள், சமூகத் தலைவர்கள் எதிர்க்குரல் எழுப்புகின்றார்கள். இதுதான் இன்று அரசைப் பிடித்துள்ள 'கொவிட் - 20' நோயாகும்.

இதை மறைக்கவே இன்று இந்த அரசு, வழமைபோல் இனவாதத்தை கையில் எடுத்துள்ளது. அதனாலேயே நண்பர் ரிஷாத் பதியுதீன் மீது கைது முயற்சி நடைபெறுகின்றது. அவரைக் கைது செய்து விட்டு, நாட்டில் 'ரிஷாத் கைது' எனச் செய்தித் தலைப்பை உருவாக்க அரசு முயல்கின்றது. இன்று சிங்களமொழி தேசிய பத்திரிகைகளில், தலைப்புச் செய்தி என்ன?

'ரிஷாத் பதியுதீனைக் கைது செய்ய சட்டமா அதிபர் அறிவுறுத்தல்', 'ரிஷாத்தைத் தேடி ஆறு பொலிஸ் குழுக்கள் வலை விரிப்பு' என்பதே இன்றைய சிங்கள பத்திரிக்கைகளின் தலைப்பு செய்திகள். இது அப்பாவி சிங்கள மக்கள் மத்தியில், பிழையான கருத்தைக் கொண்டு செல்கின்றது. விவரம் அறியாத பாமர கிராமத்து சிங்கள மக்கள் மத்தியில், இன்று ரிஷாத் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் கைதாகின்றார் என்றமாதிரியான செய்தி மயக்கத்தை அரசு பரப்புகின்றது.

புத்தளம் மாவட்டத்தில் வாழும் மன்னார் மாவட்ட வாக்காளர்களை, மன்னாரில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளுக்கு, இ.போ.ச. பஸ்களில் கொண்டு சென்றது தொடர்பில், செலவான அரசு பணம் தொண்ணூறு இலட்சம் ரூபா. இது அப்போதே மீளச் செலுத்தப்பட்டு விட்டது. மேலும், இது தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட அரச நிதி அல்ல. இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மக்களின் வாக்குரிமை தொடர்பில், மக்கள் பிரதிநிதிகளுக்குக் கடப்பாடு இருக்கின்றது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவருக்கும் கடப்பாடு இருக்கின்றது. அவர் இது பற்றி என்ன சொல்கின்றார்?

இந்த உண்மைகளை மூடி மறைத்து, அரச வளங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றம் சுமத்தி, பிணை வழங்க முடியாத வழக்கில் ரிஷாத்தை மாட்டி விட்டு, அரசு, தான்எதிர்கொள்ளும் 'கொவிட்- 20' பிரச்சினைகளை மூடிமறைக்க முயல்கின்றது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இந்த விவகாரம் தொடர்பில், சட்டமா அதிபர் இதுவரை தூங்கிக் கொண்டு இருந்தாரா? இல்லை, அவரும், இப்போது அரசியல் செய்கின்றாரா?

அப்படியானால், இதே ராஜபக்ஷ அரசு, 2015ஆம் வருட தேர்தலில், தங்கள் தேர்தல் கூட்டங்களுக்காகப் பயன்படுத்திய அரச வளங்களுக்கான கட்டணங்களை மீளச் செலுத்தி விட்டதா? வாக்களிக்க அல்ல, தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு மக்களை அழைத்துச் செல்லப் பயன்படுத்திய இ.போ.ச. பஸ் கட்டணங்கள், விளம்பரங்களுக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்த விமானபடை நிறுவன ஹெலிக்ஹொப்டர் வாடகை எனப் பல கோடி ரூபா நிலுவையில் இருக்கின்றன. ஆகவே, இவர்களை எல்லாம், சட்டமா அதிபரால், கைது செய்ய உத்தரவு இட முடியாதா?

அரசு என்ன செய்வது எனத் தெரியாமல், சந்தைக்கு வந்து அன்றன்று வருமானம் தேடும் நாள் சம்பள தொழிலாளர்களைப் போல், ஒவ்வொரு நாளும் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சமாளிக்க ஒவ்வொரு நாள் காலையிலும் ஒவ்வொரு முடிவுகளை எடுக்கின்றது.

முதல் நாள், ரிஷாத்தின் சகோதரர் ரியாத்தை குற்றமற்றவர் என விடுவிக்கின்றது. மறுநாள், பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன மீது பழி சுமத்தி அவரைக் காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்கின்றது. அடுத்த நாள், ஜாலியவை மீண்டும் கொழும்புக்குக் கொண்டு வருகின்றது. அடுத்தநாள், அரச எம்.பிக்களைக் கொண்டு ரியாத்தைக் கைது செய்யுங்கள் எனக் கடிதம் எழுத வைக்கின்றது. அப்புறம், இப்போது அரச வளங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றம் சுமத்தி முன்னாள் அமைச்சர் ரிஷாத்தைக் கைது செய்ய முயல்கின்றது.

ரிஷாத், ரியாத் சகோதர்கள் மீது அரசுக்கு குற்றம் சுமத்த முடியவில்லையே. குற்றம் சுமத்திய அரசே குற்றமற்றவர் என விடுவிக்கின்றதே. ஆகவே, உண்மையில் கைது செய்யப்பட வேண்டியவர்கள், இவர்கள் அல்லர்.

கடந்த காலங்களில், உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு வெடிப்பு தொடர்பில், தம்மிடம் முழுமையான சாட்சியங்கள், தகவல்கள் இருக்கின்றன என்று பகிரங்கமாகப் பலமுறை கூக்குரல் இட்ட விமல் வீரவன்ஸ போன்றோரைத்தான் அரசு கைது செய்ய வேண்டும். பொய் சாட்சியம் கூறினார்கள் அல்லது இன்னமும் தங்களிடம் இருக்கின்ற தகவல்களை மறைக்கின்றார்கள் என விமல் வீரவன்ஸ மற்றும் அன்று வரிசையாக சி.ஐ.டி. தலைமையகம் சென்ற அனைவரையும் அரசு கைது செய்து, உடன் விசாரித்து, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு வெடிப்பு தொடர்பில் உண்மைகளை வெளியே கொண்டு வர வேண்டும்.

அதை விடுத்து, தன்னைப் பிடித்துள்ள இந்த 'கொவிட் - 20' நோய்க்குமருந்து தேடக்கூடாது. ஏனெனில் கொவிட் - 19னை போல் இந்த நோய்க்கும் மருந்தில்லை - என்றார்.

## ரிஷாத் மீது ஞானசாரர் புதிதாகக் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீனைக் கைதுசெய்ய பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது உள்ளன என பொதுபலசேனா அமைப்பினர் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்

ரிஷாத் பதியூதீனுக்கு எதிராக நேற்று நுகர்வோர் அதிகார சபையில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

சிறிய குற்றச்சாட்டை முன்னிலைப்படுத்தி பாரதூரமான குற்றச் சாட்டை மூடிமறைக்க வேண்டாம். தவறுகளை திருத்திக் கொண்டு தண்டனை வழங்கவே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் சுட்டிக் காட்டினார்.

2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி நுகர்வோர் அதிகார சபையில் வழங்கப்பட்ட தொழில் நியமனத்தில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன.

இம்முறைக்கேடு தொடர்பில் உரிய விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## பாதுகாப்பு உத்தியோகத்தரும் கைது

### ரிஷாத் தலைமறைவு

கொழும்பு, ஒக்.15

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் முன்னர் அமைச்சராக இருந்தபோது அவரது மெய்ப்பாதுகாவலராகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப் பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன் அவருக்குச் சொந்தமான சொகுசு வாகனங்கள் இரண்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கையகப்படுத்தப்பட்டுள்ள குறித்த வாகனங்களிலிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள், நான்கு மகசின்கள், 48 ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை முறைகேடாகப் பயன்படுத்தி, இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் வன்னி மாவட்ட வாக்காளர்களை வாக்களிப்பதற்கு அழைத்துச் சென்றிருந்தார் என்று ரிஷாத் பதியுதீன் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் ரிஷாத் பதியுதீனைக் கைது செய்வதற்காக அவரின் கொழும்பு மற்றும் மன்னார் பகுதிகளில் அமைந்துள்ள இல்லங்களில் பொலிஸார் நேற்றுமுன்தினம் தேடுதல் நடத்தியுள்ளனர்.

குறித்த இரு வீடுகளிலும் அவர் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் மெய்ப்பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தராக இருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படும்

கொழும்பிலுள்ள அனைத்து சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நேற்றைய தினம் (புதன்கிழமை) இந்த பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருந்தன என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மெகசின், விளக்கமறியல் சிறைச்சாலை, வெலிக்கடை சிறைச்சாலை ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை தலைமையகத்தின் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மீகமுவ பிரதேசத்தில் 10 பேருக்குத் தொற்று

மீகமுவ பகுதியில்கொரோனாவால் பாதிக்கப்பட்ட 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் கொழும்பில்உள்ளகொரோனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர் என நீர்கொழும்பு நகராட்சி மன்ற சுகாதார பிரிவு கூறியுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் ஜோசப் தெரு, பிடிபன, உப்பலம முன்னக்கரய மற்றும் நெகம்போவின் கட்டுவபிட்டி பகுதிகளில் வசிப்பவர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்களில் ஐந்து வயது குழந்தையும் அடக்கம். மேலும் 4 பேர் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரிஷாத்தின் கணக்காளர் கைது!

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கணக்காளர் அழகரத்னம் மனோரஞ்சன் என்பவர் கிருலப்பனை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரிஷாத் பதியுதீன் உட்பட மூவரைக் கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவுக்கு அமையவே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# ஒரே விடுதியில் 42 பேருக்கு 'கொரோனா' மேலும் தீவிரமடைகின்ற சமூகத் தொற்று

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.14

மினுவாங்கொடை ஆடைத்தொழிற் சாலை கொரோனா கொத்தணிப் பரவ லுடன் தொடர்புபட்டு ஒரே விடுதியில் தங்கியிருந்த 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து சமூகத் தொற்று குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை கொத்தணியில் நேற்று 194 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டிருந்தது. இவர்களில் 194 பேரில் 42 தொற்றாளர் கள் ஒரே விடுதியில் தங்கியிருந் தமை தெரியவந்துள் ளது.

இது குறித்து இராணுவத் தளபதி லெப்டினனட் ஜென ரல் சவேந்திர சில்வா தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் சரியான தகவல்களை வழங்குவது மிக வும் முக்கியமான ஒரு விடயம்.

நேற்று 80 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்தும், ஏனைய 114 பேரும் எவ்வித தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்படாத நிலையிலும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுள் கம்பஹா பகுதியைச் சேர்ந்த 36 பேர், மினுவங்கொடைப் பகுதியைச் சேர்ந்த 38 பேர், திவுலப் பிட்டியவைச் சேர்ந்த 34 பேர் மற்றும் சீதுவப் பகுதி யைச் சேர்ந்த ஒரே விடுதியில் தங்கியிருந்த 42 பேர் அடங்குகின்றனர்.

அத்துடன் கொழும்பில் 7 பேர் மற்றும் கிரிந்திவெல யில் 4 பேர் என நாட் டின் மேலும் பல பகுதிகளில் இருந்து இவ்வாறு தொற்றாளர்கள் இனங் காணப்பட் டுள்ளனர்.

இவ்வாறு நாட்டின் ஏதாவது பகுதியில் இருந்து



ஒருவர் இனங்காணப்பட்டால் அவரில் இருந்து மேலும் பலருக்குத் தொற்று ஏற்படலாம்.

பொது விடுதிகளில் தங்கியிருந்து பணிபுரிபவர்கள் தமது பணியிடப் பிரதானிகளிடம் அது குறித்த தகவல் களை வழங்குவது கட்டாயம் – என்றார்.

---

நிலத்தை ஆக்கிரமிக்கும் சிங்கள மக்களைத் தட்டிக் கேட்ட

# மட்டு. மாவட்ட அரச அதிபரை தூக்கி வீசியது ராஜபக்ஷ அரசு

## கடும் அதிருப்தியில் கூட்டமைப்பு

(ந.லோகதயாளன்)

ட்டக்களப்பில் உள்ள மேய்ச்சல் தரை நிலத்தை ஆக்கிரமிக்க முயன்ற சிங்கள மக்களுடன் தர்க்கித்த மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா, ராஜபக்ஷ அரசால் தூக்கி எறியப்பட்டார்.

மட்டக்கக்களப்பு மாவட்டத்தில் நீண்ட காலமாகத் தமிழ் மக்களின் வாழ்வியலா கக் காணப்படும் விலங்கு வேளாண்மையான கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரையை வனவளத் திணைக்களம் உரிமை கோரித் தடுத்திருக்கும்போது அப்பகுதியில் சிங்கள மக்கள் துப்பரவுப் பணியில் ஈடு படுகின்றனர். இந்த விடயத் தைத் தமிழ் மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றமையோடு சகல திணைக்களங்களின் கவனத்துக்கும் கொண்டு சென் றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பல தரப்பினரோடும் தொடர்பு கொண்ட போதும் தீர்வு கிட்டாத நிலையில் கிழக்கு மாகாண ஆளுநரிடமும் சென்று முறையிட்ட வேளை, காணி அற்ற சிங்கள மக்கள் வாழக் கூடாதா? நீங்கள் மேய்ச்சல் தரை கோருகின்றீர்கள் அவர்களோ வாழ் நிலம் கோருகின் றனர். அதனைத் தடுக்க முடியாது என அதிகாரத் தோரணையில் பதிலளித்திருந்தார்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதி பரான திருமதி கலாமதி பத்மராஜா சம்பவ இடத் துக்கு



நேற்று நேரில் சென்று பாவை யிட்டதோடு ஆவணங் கள் ரீதியிலும் பரீட்சித்தமையால் அங்கிருந்த சிங் கள மக்கள் மாவட்ட அரச அதிபரு டன் முரண்பட்டனர். அவரும் தமிழ் மக்கள் சார்பான நிலைப்பாடுகளை எடுத்துரைத்தார்.

இதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட அரச உடன டியாகவே பதவி தூக்கியெறியப்பட்டு அந்த இடத் துக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செய லாளரான கே.கரு ணாகரன் நியமிக்கப்படுகின்றார்.

ராஜபக்ஷ அரசின் இந்த நடவ டிக்கை தொடர்பில் கடும் அதிருப்தியடைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இந் நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மட்டக்களப்பில் ஒன்றுகூடி ஆராய்ந்து வருகின் றனர்.

---

## மச்சாளின் பதவியைப் பிடுங்கி மச்சானுக்கு வழங்குகின்ற அரசு

(ந.லோகதயாளன்)

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பதவியை மச் சாளிடம் இருந்து பறித்த ராஜபக்ஷ அரசு, அந்தப் பதவியை அவரது மச்சானுக்கு வழங்குகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராகத் தற்போது பதவி வகிக்கும் திருமதி கலாமதி பத்மராஜா உடனடியாக நீக்கப்படுகின்றார். அவரது இடத்துக்குக் கிழக்கு மாகாண சுகா தார அமைச்சின் செயலாளரான கண பதிப்பிள்ளை கருணாகரன் நியமிக்கப்படுகின் றார்.

இவ்வாறு புதிதாக நியமிக்கப்படும் மாவட்ட அரச அதிபர், முன்னாள் அரச அதிபரின் உடன் பிறந்த சகோதரியையே திருமணம் செய்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

இதன் காரணமாகவே மச்சாளிடம் பறிக்கும் பதவி மச்சானிடமே வழங்கப்படுகின்றது என மாவட்ட நிர் வாகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

---

## உயர்தரப் பரீட்சை எழுதுகின்ற மாணவனுக்கும் 'கொரோனா'

கம்பஹா – திவுலப்பிட்டிய ஞானோதய வித்தி யாலயத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற் றுகின்ற மாணவர் ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனாவால் பாதிக்கப்பட்ட மாணவர் இரணவில வைத்தியசாலையிலிருந்து பரீட் சைக்குத் தோற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த மாணவனுடன் நெருங்கிய தொடர்புகொண்ட 8 மாண வர்களுக்கும் கொரோனா வைரஸ் பரிசோதனையைச் செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள் ளமை குறிப்பி டத்தக்கது.

---

## இரு பெண் தொழிலாளர்கள் மரம் முறிந்து வீழ்ந்ததில் பலி

### பலாங்கொடவில் சோகம்

தேயிலைத் தோட்டத்தில் மரமொன்று முறிந்து விழுந்ததால் கொழுந்து கொய்து கொண்டிருந்த இரு பெண் தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பலாங்கொட, பின்னவல – வலவ்வத்த பகுதியிலுள்ள அரசாங் கத்துக்குரிய பெருந்தோட்டமொன்றில் கொழுந்து பறித்துக்கொண்டிருக்கையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மரம் முறிந்து விழுந்ததால் மூவர் நசுங்கி யுள்ளனர். இதனையடுத்து அவர்கள் மூவரும் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

எனினும், இருவர் உயிரிழந்து விட்டனர். மற் றைய பெண்ணுக்கு தீவிர சிகிச்சைகள் வழங்கப் பட்டு வருகின்றன. வலவ்வத்த பெருந்தோட்டத் தைச் சேர்ந்த பெண்கள் இருவரே பலியாகியுள் ளனர்.

பலாங்கொட பகுதியிலும் கடந்த சில நாள்களாக கடும் காற்றுடன் அடைமழை பெய்துவருகின்றது.

---

## சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டில் பட்டப்பகலில் திருட்டு

### நகைகள், பணம் கொள்ளை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ். இணுவில் – மஞ்சத் தடி பகுதியில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தரின் வீடு இன்று பட்டப்பகலில் உடைக்கப் பட்டு நகைகள் மற்றும் பணம் திரு டப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது–

இணுவில் – மஞ்சத்தடி பகுதியில் உள்ள சமுர்த்தி உத் தியோகத்தர் தனது கடமை களுக்காக இன்று காலை சென்றுள்ளார். அவ்வாறான நிலையில் வீட்டில் ஒருவரும் இல்லாத வேளையில் பட்டப் பகலில் வீட்டின் கதவை உடைத்து திருடர்கள் நுழைந் துள்ளனர்.

இவ்வாறு உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள் ளனர்.

குறித்த வீட்டின் கதவு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த 5 பவுண் தங்க நகை களும், 20 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் குறித்த திருட்டுச் சம் பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

## அநுராதபுரத்தில் கைதி தப்பினார்

அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து நேற்று மாலை கைதியொருவர் தப்பிச் சென் றுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

தம்புத்தேகம – கல்வடுவாகம பகுதியைச் சேர்ந்த 27 வயதான கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். இந்த சந்தேக நபர் சட்ட விரோத மதுபான தயாரிப்பு குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவராவார்.

அவர் தம்புத்தேகம நீதிமன்ற உத்தரவின் படி சிறையில் அடைக்கப்பட்டார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். சந்தேக நபர் செவ் வாய்க்கிழமை பிற்பகல் சிறைச்சாலை வளா கத்தைத் துப்பரவு செய்து கொண்டிருந்தார் எனவும் அதன் போதே அவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் குறிப் பிட்டனர்.

தப்பிச் சென்ற கைதியை கைது செய்வது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிறைச் சாலை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் ஈஸ்டர் தாக்குதலின்போது பலவீனம்!

## உண்மையை ஒத்துக் கொண்டார் ரணில்



கொழும்பு, ஒக்.15

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் பலவீனமடைந்து காணப்பட்டன என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இரண்டாவது முறையாக சாட்சியம் வழங்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ஐ.எஸ். அமைப்பின் நிலைப்பாட்டை கொண்டவர்கள் நாட்டில் இருந்தாலும் அவர்களது செயற்பாடுகள் தொடர்பாகத் தகவல்கள் வெளிவராமை, இணையத்தளம் ஊடாக மாத்திரம் அவர்கள் தொடர்புகளைப் பேணியமை தெரியவந்தமையால் அந்த அமைப்பை இலங்கையில் தடைசெய்யவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐ.எஸ். அமைப்பை தடை செய்ய வேண்டியிருந்ததாக முன்னாள் பிரதமர் ஆணைக்குழுவில் ஒப்புக்கொண்டுள்ளார்.

அரச நிர்வாகத்தின்போது தமது தரப்புக்கும் மைத்திரிபால சிறிசேனவின் தரப்புக்கும் இடையில் அரசியல் ரீதியாக பாரிய கருத்து மோதல்கள் ஏற்படவில்லை எனவும் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது மற்றும் அபிவிருத்தி பணிகள் போன்ற அன்றாட செயற்பாடுகள் தொடர்பாக மாத்திரம் சில பிரச்சினைகள் ஏற்பட்டன என அவர் கூறியுள்ளார்.

அப்போதைய அரசாங்கத்தால் நடத்தப்பட்ட பாதுகாப்பு பேரவைக் கூட்டங்கள் குறுகிய அறிவித்தலுக்கு அமைய இடம்பெற்றன என சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, இதனால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கடமைகளை இரத்து செய்து பாதுகாப்பு பேரவை கூட்டங்களில் பங்கேற்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இருந்த அரசாங்கங்கள் பாதுகாப்பு பேரவை கூடுவதற்கான நிலையான நாள் ஒன்றை ஒதுக்கியிருந்தன எனவும் அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் 14 வீடுகள் சேதம்



வவுனியாவில் வீசிய பலத்த காற்றுக் காரணமாக 14 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் இந்த வீடுகளில் வசித்த 36 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அப்பகுதி கிராம அலுவலகர்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணியில் நேற்று முன்தினம் ஒரு வீடு சேதமடைந்தது. நேற்று வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வவுனியா, செட்டிகுளம் போன்ற பகுதிகளில் 13 வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூரை பிரித்து இறங்கி சிறுமியைத் தாயாக்கினாராம் வயோதிபருக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனை

## திருகோணமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சூரங்கல் பகுதியில் வீட்டின் கூரையைக் கழற்றி உட்சென்று 16 வயதிற்கு குறைந்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்த வயோதிபருக்கு 20 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

கிண்ணியா – சூரங்கல் பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2012 ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சிறுமி உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது வீட்டின் கூரையைக் கழற்றி வீட்டுக்குள் இறங்கி குறித்த வயோதிபர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நிலையில் அந்தச் சிறுமி கர்ப்பமாக்கி பெண் குழந்தை பிறந்துள்ளது.

இதனையடுத்து இரத்த பரிசோதனை மரபணுப் பரிசோதனை செய்தபோது பிறந்த பெண் குழந்தையின் தந்தை 99.999 வீதம் எதிரியாகிய சேகு மதார் தையூப் என சோதனை அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அதனை இரசாயன பகுப்பாய்வாளர் நீதிமன்றில் ஆஜராகி நேரடியாக சாட்சியம் அளித்து எதிரிதான் பிறந்த குழந்தைக்கு 99.999 வீதம் தந்தை என உறுதிப்படுத்தி சாட்சியமளித்துள்ளார்.

இந்நிலையில் 16 வயதிற்கு குறைந்த வயது சிறுமி நீதிமன்றில் சாட்சியமளித்த போது எதிரி மன்றில் ஆஜராகி இருந்தார். அதன் பின்னர் தலைமறைவாகி விட்டார்.

2019 ஆம் ஆண்டு 8ம் மாதம் எட்டாம் திகதி 22 ஆம் இலக்க 1995ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட தண்டனைச் சட்டத்தின் கோவை பிரிவு 364 (02) உ பிரிவின் கீழ் 16 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளையை நியதிச்சட்ட கற்பழிப்பு புரிந்ததாக 2019 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் எட்டாம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் குற்றப் பகர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எதிரிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இதனையடுத்து அவருக்கு எதிராக திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்று நேற்றைய தினம் (14) இவர் குற்றவாளி என தீர்ப்பு பகிரங்கமாக திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டப்பட்டது.

பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக குற்றவாளியாக குற்றம்சாட்டப்பட்ட குறித்த நபர் கடந்த சில வழக்கு தவணைகளுக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காமையால் எதிரி இன்றி வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு நேற்றைய தினம் இவரின் குற்றத்திற்கான தீர்ப்பு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டப்பட்டது.

எதிரி நீதிமன்றத்தில் சமுகமளிக்காதமையினால் அவருக்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

# முத்தையா முரளிதரனாக மாறுகிறார் விஜய் சேதுபதி

## கலக்கலான மோஷன் போஸ்டர்





முத்தையா முரளிதரன் தோற்றதுக்கு மாறிய விஜய் சேதுபதியின் '800' திரைப்படத்தின் மோஷன் போஸ்டர் வெளியாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் விஜய் சேதுபதி நடிக்கிறார்.

டெஸ்ட் அரங்கில் முதன்முறையாக '800' விக்கெட்டுகளைக் கைப்பற்றியவர் முரளிதரன். இதனால், இந்தப் படத்திற்கு '800' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தை எம்.எஸ்.ஸ்ரீபதி இயக்குகிறார். தார் மோன் பிக்சர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ராணா இப்படத்தைத் தயாரிக்கிறார்.

இந்தப்படம் கிரிக்கெட் சம்பந்தமானது என்பதால், சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் சன்ரைசரஸ் ஹைதராபாத் அணிகள் மோதும் ஐ.பி.எல். லீக் போட்டியில் முத்தையா முரளிதரனும், விஜய் சேதுபதியும் சேர்ந்து இப்படத்தின் மோஷன் போஸ்டரை வெளியிட்டார்கள்.

இதில், முத்தையா முரளிதரன் தோற்றத்தில் விஜய் சேதுபதி இருக்கும் புகைப்படம் இறுதியில்வருகிறது. இது ரசிகர்களை பெரிய அளவில் கவர்ந்துள்ளதுடன் தற்போது இந்த மோஷன் போஸ்டர் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

இதேவேளை, '800' படத்தின் படப்பிடிப்பு வரும் டிசெம்பரில் தொடங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. படப்பிடிப்பு, இலங்கை, இங்கிலாந்து, இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவில் நடத்தப்படவுள்ளதுடன் அடுத்த ஆண்டு இறுதியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பொதுப் போக்குவரத்தை தவிர்க்க ஆலோசனை!

கொழும்பு, ஒக் 15

கொழும்பு – மத்துகம சொகுசு பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்து சாரதி, அதன் நடத்துனர், பேருந்தின் உரிமையாளர் ஆகிய மூவரும் கொவிட் தொற்று உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, வேலைக்கு செல்வோர் பொதுப்போக்குவரத்தை தவிர்த்துக் கொள்ளுமாறு தேசிய மருந்தகக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர் –

தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் கொத்தானது சமூகத்தில் பல்வேறு இடங்களில் விஸ்தரித்துள்ளது. இருப்பினும் சென்ற முறைப் போன்று நாடளாவிய ரீதியில் முடக்கப்படாமல் குறிப்பிட்ட சில இடங்களே முடக்கப்பட்டுள்ளன. மக்களின் அன்றாட பொருளாதார நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாமலிருப்பதற்காகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இல்லாத பகுதியில் கொவிட் இல்லை என்று அர்த்தப்படுத்த முடியாது.

அதே போன்று தனியார் நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்தும் நாம் அறிவித்துள்ளோம். அவை பின்பற்றப்பட வேண்டும். அதே போன்று நிறுவனமொன்றில் வேலைக்கு வரும் நபர்கள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தாது நிறுவனத்திற்கான தனிப்பட்ட போக்குவரத்து முறையொன்றை நிறுவனங்கள், ஊழியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாகப் பாதுகாப்பாகச் செயற்படலாம்.

அதேபோன்று ஊழியர்களிடையே சமூக இடைவெளியை பேணுவதும் முக்கியமான ஒரு விடயமாகும்.

மேலும் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்களில் ஒன்றாக இணைந்து உணவருந்துதல் தொற்றுப் பரவலுக்கு காரணமாக இருக்கலாம். எனவே உணவகங்களில் உணவுகளை வாங்கினாலும் தனியாக இருந்து உணவருந்துதல் தொற்றுப் பரவலைத் தவிர்க்கும். அதே போன்று பொருள்களை கொள்வனவு செய்கின்ற போது அருகிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு நடந்து செல்வது பொருத்தமானது. மேலும் வேலைக்குச் செல்பவர்கள் உங்களிடம் மோட்டார் சைக்கிள் இருந்தால் அதனைப் பயன்படுத்தலாம். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால் சனநெரிசல் குறைந்த நேரத்தில் பயன்படுத்துங்கள்.

அதே போன்று உங்களில் ஒருவருக்கு சளி, தொண்டை வலி, அல்லது காய்ச்சல் இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்கு அறிவித்து பரிசோதனையொன்றை மேற்கொள்ளுங்கள். இதன் ஊடாக தொற்று இருப்பின் சிகிச்சையினை பெற்றுக்கொள்ளலாம். அதே போன்று உங்களில் இருந்து மற்றுமொருவருக்கு நோய் தொற்றுவதை தவிர்த்துக்கொள்ளலாம்.' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருள் குற்றம்: மூவருக்கு ஆயுள்தண்டனை

ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்து விற்பனை செய்தமை தொடர்பில் வெவ்வேறாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளின் எதிரிகளான மூவருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி ஆயுள் தண்டனை விதித்துள்ளார்.

நீண்ட விசாரணையின் பின்னர் நீதவான் இந்த தண்டனையை வழங்கியுள்ளார்.

அதன்படி 6.68 கிராம் ஹெரோயின் போதை பொருளை தம்வசம் வைத்திருந்து விற்பனை செய்தமை தொடர்பில் பொரளை பகுதியில் வசிக்கும் ஏ.டபிள்யூ. மனோஜ் என்பவருக்கு இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

டீ.ஆர்.எச் கருணாரத்ன என்ற நபருக்கு இரண்டாவதாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் சுங்க அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது 2.37 கிராம் ஹெரோயின் போதை பொருளை தம்வசம் வைத்தருந்த போது இவட் கைது செய்யப்பட்டிருந்தார்.

மாளிகாவத்தை பகுதியில் வசிக்கும் முனியாண்டி உபுல் சமிந்த எனப்படும் கொண்டா சமிந்த என்பவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் 3.29 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்து விற்பனை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டை எதிர்கொண்டிருந்தார்.

இவரை கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மாளிகாவத்த பகுதியில் வைத்து கொழும்பு குற்றப்புலனாய்வு அதிகாரிகள் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்புக் காவல் தொடர்பான உத்தரவில் மைத்திரியின் கையொப்பத்தில் மாற்றம்

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு அமைய இராணுவ புலனாய்வு அதிகாரிகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இட்ட கையொப்பத்தில் மாற்றங்கள் காணப்படுவதாக ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகி சாட்சி வழங்கிய போதே செனவிரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஓய்வுபெற்ற அதிகாரி டிலஞ்சன் உபசேன தெரிவித்த கருத்துக்குப் பதிலை பெற்றுக்கொள்ளவே முன்னாள் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன நேற்று ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் டிலஞ்சன் உபசேனவை 2015 செப்டெம்பர் 8 ஆம் திகதி முதல் 90 நாள்களுக்கும் அதிகமாக காலம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தடுத்து வைக்க அனுமதித்தமை குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பம் இட்டு அனுமதித்த ஆவணம் உதய ஆர்.செனவிரத்னவிற்கு காண்பிக்கப்பட்டது.

அப்போது அவர் குறித்த கையெழுத்தை பார்க்கும் போது வேறுபட்டுள்ளதை காண முடிவதாக அவர் கூறினார்.

இதன்போது 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 3 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் கையொப்பத்தை சாட்சியாளரின் கவனத்திற்கு ஆணைக்குழு அதிகாரிகள் முன் வைத்தனர்.

அந்த கையொப்பம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடையது என உதய ஆர்.செனவிரத்ன உறுதிப்படுத்தினார்.

இதன்போது வழக்கின் விசாரணை முடிந்துவிட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் கடற்படைய லெப்டினன்ட் கொமாண்டர் யோசித ராஜபக்ஷ நேற்றுக் காலை அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு வந்தாரெனக் கூறப்பட்டது.

கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வொர்க் – அதாவது சி.எஸ்.என் நிறுவனம் – ஆரம்பித்த போது நிதி மோசடி மற்றும் அரசு சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் தான் கைது செய்யப்பட்டு 45 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சாட்சியம் வழங்கவே அவர் வருகை தந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# சகல மாவட்டங்களை கேந்திரமாகக் கொண்டு 25 வெகுஜன ஊடகப் பாடசாலைகள் அமையும்

## ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தகவல்

நாட்டின் பாடசாலை மாணவர்களின் ஊடகத்துறை கல்வியை மேம்படுத்துவதற்காக மாவட்டங்களை கேந்திரமாகக் கொண்டு 25 வெகுஜன ஊடகப் பாடசாலைகள் நாடு முழுவதிலும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் திருமதி. சாரா ஹல்டன் (Sarah Hulton) மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இந்த சந்திப்பின் போது அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது வெகுஜன ஊடகத்துறை குறித்த பல விடயங்கள் தொடர்பில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் இவருடன் விரிவாக கலந்துரையாடினர்.

பாடசாலைக் கல்வியின் போது மாணவர்களுக்கு வெகுஜன ஊடகம் தொடர்பான தெளிவு மற்றும் ஊடக நெறிமுறைகள் தொடர்பாக உரிய கல்வியை வழங்க வேண்டும் என்றும் இதற்காக மாவட்ட மட்டத்தில் ஊடகப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்படுவதாகவும் அமைச்சர் இதன்போது கூறினார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வடக்கை கேந்திரமாகக் கொண்டு யாழ் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஊடக கல்வி அறிவை மேம்படுத்தும் திட்டம் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும், இதற்கமைவாக இந்த வேலைத்திட்டம் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப் படவிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

தகவல்களை வழங்கும் பொழுது சரியான வகையிலும் துரிதமாகவும் வழங்குவதற்காக அரசாங்க தகவல் திணைக்களம் குறுஞ்செய்தி சேவையைப் போன்று சமூக ஊடகங்கள் ஊடாக செய்திகளை வழங்கும் புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கு மேலதிகமாக ஏனைய ஊடக நிறுவனங்களை தொடர்பு படுத்தி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாகவும் அமைச்சர் கூறினார். ஊடக சுதந்திரத்திற்கு எந்த வகையிலும் தடையை மேற்கொள்வதில்லை என்றும், இருப்பினும் நெறிமுறைகளைப் பாதுகாத்து சரியான பொறுப்புடன் இது கையாளப்படவேண்டும் என்றும், இதற்காக நாட்டில் முழுமையான ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**மணமகள் தேவை**

1987, யாழிந்து வேளாளர், பூரம், Assistant Manager, பருத்தித்துறையை சேர்ந்த கொழும்பில் வதியும் பட்டதாரி மணமகன் (பதிவு இலக்கம்: 4695). விபரங்களுக்கு இணையவழி திருமணசேவை www.EQMarriageService.com, Ensured Qua -lity Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). திருமணம் சரிவரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை. பதிவுக்கு 50% விலைக் கழிவு. அழையுங்கள் 076 664 9401.

**மணமகன் தேவை**

1991, யாழிந்து வேளாளர், ஆயிலியம், NGO வடலியடைப்பை சேர்ந்த பட்டதாரி மணமகள் (பதிவு இலக்கம் : 4685). விபரங்களுக்கு இணையவழி திருமணசேவை www.EQMarriageService.com, Ensured Qua -lity Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). காலவரையறையின்றி, இடைத் தரகரின்றி மணமக்களுடன் இணையத்தளத்தினுடாக தொடர்புகொள்ளுங்கள். திருமணம் சரிவரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை. பதிவுக்கு 50% விலைக்கழிவு. அழையுங்கள் 076 664 9401.

# பெண் கொலை; ஆண் தற்கொலை ஒரே அறையில் 2 சடலங்கள் மீட்பு

## மிஹிந்தலை அம்பத்தலாகமவில் சம்பவம்

திருகோணமலை வீதி – மிஹிந்தலை பகுதியைச்சேர்ந்த பெண்ணொருவரின் கழுத்து வெட்டப்பட்ட சடலமும், இன்னொரு ஆணின் சடலமும் வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பத்தலாகம பகுதி வீடொன்றிலிருந்து இருந்தே பெண்ணொருவர் உட்பட இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

திருகோணமலை வீதி – மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 48 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு, ஹிங்குருவெள – எல்லவெள பகுதியைச் சேர்ந்த 57 வயதான சந்தேக நபரே தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் அறையொன்றில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டமையுடன் அதே அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணின் கழுத்தை வெட்டி கொலை செய்துவிட்டு சந்தேக நபர் தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

**கல்யாணமாலை**

வட சர்வதேச திருமண சேவை

| மணமகள் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி – 1988.08.30 | பிறந்த திகதி – 1989.12.18 |
| மதம் – இந்து V | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – ரேவதி | நட்சத்திரம் – மகம் |
| பாவம் – 44 | பாவம் – 31 1/2 |
| செவ்வாய் – 7 இல் | கல்வி – பட்டதாரி |
| கல்வி – பட்டதாரி | தொழில் – ஆசிரியர் |
| தொழில் – அமெரிக்கா PR | எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம். |
| எதிர்பார்ப்பு – பட்டதாரி பெண் | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1025/=Kg

• பிரான்ஸ் • ஜெர்மனி
• டென்மார்க்
• நெதர்லாந்து
• இத்தாலி
• சுவிஸ்

1150/= Kg



எமது நேரடிக்கிளைகள்

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • கன்னாகம்
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2020 இல் வெளியிடப்பெற்றது.